அருந்துங்கள்!
அண்ணா கோப்பி
பாவித்த வெற்றுப் பைகளைக் கொடுத்து இனாம் பெற்றுக்கொள்ளுங்கள்.
அண்ணா
தொழிலகம்
இணுவில்
(சி-9106)

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சத்துணவு
'ஜீவாகாரம்'
பக்கட் விலை 50/-
நான்கு மாதக் குழந்தைகளிலிருந்து கொடுக்கக் கூடியது
அண்ணா
தொழிலகம்
இணுவில்
(சி-9106)

சுடர் 10 திருவள்ளுவர் ஆண்டு 2026 சித்திரை 03 ஞாயிற்றுக்கிழமை (16 - 04 - 1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 139

பாதுகாப்புக்கு கூடுதல் பணம் ஒதுக்கிய

# சந்திரிகா அரசின் பட்ஜெட்டில் திருப்தி; சர்வதேச நாணய நிதியம் அதிக கடன்!

## ஏனைய நிதிவழங்கும் நிறுவனங்களும் கடன் வழங்க ஊக்குவிப்பாக அமையும்

கொழும்பு, ஏப்ரல் 16

சந்திரிகா அரசாங்கம் கடந்த பெப்ரவரி மாதம் சமர்ப்பித்த வரவு — செலவுத் திட்டம் (பட்ஜெட்) குறித்து சர்வதேச நாணய நிதியம் திருப்தி தெரிவித்துள்ளது. அதன் அடிப்படையில் ஸ்ரீலங்காவுக்கு கூடுதல் சலுகைக் கடன் வழங்குவதற்கு முடிவு செய்யப்பட்டிருப்பதாக ச. நா. நிதியத்தின் வதிவிடப் பிரதிநிதி சயிரஸ் சசான் பொர் தெரிவித்தார்.

1994 ஆம் ஆண்டுக்குரிய வரவு செலவுத் திட்டத்தில் பாதுகாப்பு அமைச்சுக்கு வழங்கப்பட்ட நிதியை விட இம்முறை நூறு கோடி ரூபா அதிகமாக ஒதுக்கப்பட்டிருப்பினும் —

அதனைப் பொருட்படுத்தாது பொருளியல், விதியியல் காரணங்களை முன்னிறுத்தி நாணய நிதியம் இந்த முடிவுக்கு வந்திருப்பதாகச் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது.

முந்திய அரசாங்கத்தின் வரவு செலவுத் திட்டங்களோடு ஒப்பிடும்போது புதிய அரசின் 1995 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் துண்டுவிழும் தொகையை வெகுவாகக் குறைத்துள்ளது.—

திறந்த பொருளாதாரச் சந்தை முறையைத் தொடர்வது, அரசுடைமைகளைத் தனியார் மயப்படுத்துவதன் மூலம் அதில் சீர்திருத்தங்களைச் செய்வது மக்கள் நலன் திட்டங்களை கட்டுப்படுத்துதல் ஆகிய கொள்கைகளை கடைப் பிடிப்பதற்கு அரசு

(6 ஆம் பக்கம் பார்க்க)

### ஜப்பானில் தீவிர பாதுகாப்பு

டோக்கியோ, ஏப். 16

மற்றொரு விஷவாயுத் தாக்குதல் நடத்தப்படும் என்று "அவும் ஷின்ரி கியோ" மத அமைப்பு விடுத்த எச்சரிக்கையை அடுத்து ஜப்பானின் முக்கிய நகரங்களில் நேற்று தீவிர பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

ரயில் நிலையங்கள் உட்பட பொதுமக்கள் கூடும் இடங்களில் பொலீஸார் ஆயுத்த நிலையில் நிறுத்தப்பட்டிருந்தனர். ஹெலிக்கொப்டர்களும் தயார் நிலையில் வைக்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## ஐந்நூறு குடும்பங்களுக்கு ஒரு கிராமசேவையாளர்

### யாழ் மாவட்டத்திலும் அமுலாகும்

புதிய அரசாங்கத்தின் கொள்கை நடைமுறைப்படி 500 குடும்பங்களுக்கு ஒரு கிராம சேவையாளர் என்ற அடிப்படையில் கிராம சேவையாளர்களை நியமிக்கும் திட்டத்தை யாழ். மாவட்டத்திலும் நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

தற்போது 300 குடும்பங்களுக்கு ஒருவர் என்ற அடிப்படையில் செயல்படும் கிராம சேவையாளர் பிரிவு விரைவில் 500 குடும்பங்களுக்கு ஒருவர் என மாற்றம் செய்யப்படவுள்ளது. இதனால் வேலை இழக்கும் கிராம சேவையாளர்கள் வேறுபணியில் அமர்த்தப்படுவர். (ஐ-4)

### 92- 93, 93- 94 கல்வியாண்டு

## பல்கலை அனுமதியில் குறைபாடுகளை நீக்குக

### தமிழர் ஆசிரிய சங்கம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஏப் 16

1992- 93, 1993- 94 ஆம் கல்வி ஆண்டுகளில் யாழ்ப்பாணம் மற்றும் கிழக்கு இலங்கை பல்கலைக் கழகங்களுக்கு மாணவர்கள் அனுமதிக்கப்பட்ட முறையில் ஏற்பட்ட குறைகளை நீக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் இக் கோரிக்கையை விடுத்துள்ளது.

சங்கத்தின் பொதுச் செயலாளர் திரு. த. மகாசிவம் இது தொடர்பாக மகஜர் ஒன்றை ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ளார்.

யாழ்ப்பாணம், கிழக்கு பல்கலைக்கழகங்களின் 94 — 95 ஆம் கல்வியாண்டுக்கான அனுமதியில் ஏற்பட்ட குறைகளை நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவது போன்று —

92 — 93, 93 — 94 ஆம் கல்வி ஆண்டுகளில் இவ்விரு பல்கலைக்கழகங்களின் அனுமதியில் ஏற்பட்ட குறைகளையும் போக்க நடவடிக்கைகளை மேற் கொள்ள வேண்டும்.

92 — 93, 93 — 94 ஆம் கல்வி ஆண்டுக்கான அனுமதியில் இவ்விரு பல்கலைக்கழகங்களும் வேண்டுமென்றே புறக்கணிக்கப்பட்டுள்ளன.

எனவே ஜனாதிபதி இந்த விடயத்திலும் தலையிட்டு இதனை நிவர்த்தி செய்ய ஆவனசெய்ய வேண்டும். — எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-14)

## கனடாத் தேர்தலில் ஈழத் தமிழ் பெண் போட்டி

கொழும்பு, ஏப். 16

கனடாவின் ஒன்ராறியோ மாகாணத்தில் நடைபெறவுள்ள மாகாணசபைத் தேர்தலில் முதன் முறையாக இரு தமிழர்கள் வேட்பாளர்களாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

லிபரல் கட்சியின் சார்பில் கிருஷ்ணசாமி பார்த்திபன், புதிய ஜனநாயக கட்சி சார்பில் திருமதி ஜானகி பாலகிருஷ்ணன் ஆகிய இருவருமே களத்தில் குதித்துள்ள இரு தமிழர்களும் ஆவர்.

திருமதி ஜானகி யாழ். வேம்படி மகளிர் கல்லூரியின் பழைய மாணவியும், கட்டுப்பத்தை பல்கலைக்கழக பொறியியல்பீட மாணவியுமாவார்.

ஒன்ராறியோவின் டொன்மில்ஸ் என்ற தொகுதியில் இவர் வேட்பாளராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

லிபரல் கட்சியின் சார்பில் போட்டியிடும் கிருஷ்ணசாமி

[6 ஆம் பக்கம் பார்க்க)

தாண்டிக்குளத்தில்

## பயணிகளுக்கு பாற்சோறு படையினர் வழங்கினர்

கொழும்பு, ஏப் 16

புத்தாண்டை ஒட்டி தாண்டிக்குளத்தில் பயணிகளுக்கு படையினர் பாற்சோறு வழங்கினர் என்று தெரிவிக்கப்படுகிறது.

தாண்டிக்குளம் ஊடாகச் சென்ற பயணிகளுக்கு "பாற்சோறு" (கிரிபத்) மற்றும் இனிப்பு வகைகளை படையினர் வழங்கினர். தமது புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்தனர்.

சுமார் முந்நூறுக்கு மேற்பட்ட பயணிகள் அந்த வைபவத்தில் கலந்துகொண்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

இராணுவத்தின், வவுனியா மாவட்ட தலைமையகம் இதற்கான ஏற்பாடுகளைச் செய்திருந்ததாக ரூபவாஹினி தெரிவித்தது. (ஐ)

## மன்னார் கடலில் இந்திய மீனவர்கள்

மன்னார் கடலில் இந்திய மீனவர்களின் தொல்லை அதிகரித்திருப்பதாக மீனவர்கள் புகார் செய்துள்ளனர்.

வாரத்துக்கு இருதடவைகள் நூற்றுக்கணக்கான இழுவைப் படகுகளில் இந்தியமீனவர்கள் மன்னார் கடலுக்கு வருகின்றனர் என்றும்—

அவர்கள் கரவலை மீனவர்களின் வலைகளையும், மீன்களையும் அபகரித்துச் சென்றுவிடுவதாகவும்— தெரிவிக்கப்படுகிறது. (ஐ)

## "சார்க்" நாடுகளின் பெயரில் இலங்கைக்கு அமைதிப் படை

### கொழும்பு தமிழ் வாரஇதழ் தெரிவிப்பு

கொழும்பு, ஏப் 16

"சார்க்" நாடுகளது அமைதிப்படை என்ற பெயரில் இலங்கை அரசுக்கு உதவி வழங்க இந்தியா தீர்மானம் எடுக்கக்கூடும்.

"சார்க்" நாடுகளின் அமைதிப்படை இலங்கைக்கு வருமானால் அதில் இந்தியா முக்கியமான பங்கைச் செலுத்தலாம்.

— அரசியல் விமர்சகர்கள் சிலர் இவ்வாறு அபிப்பிராயம் தெரிவித்திருப்பதாக கொழும்பு தமிழ் வார இதழ் ஒன்று தெரிவிக்கிறது.

அந்த வார இதழில் வெளியாகியுள்ள அரசியல் கட்டுரை ஒன்றிலேயே இத் தகவல் வெளியாகியுள்ளது-

சார்க் நாடுகளின் அமைதிப் படை தொடர்பாக தெரிவிக்கப்படும் அபிப்பிராயத்தை நடக்க முடியாதது என்று அலட்சியம் செய்ய முடியாது.

மோதல் தவிர்ப்பு கண்காணிப்பு குழுவில் "சார்க்" நாடுகளை விடுதலைப்புலிகள் ஓரம் கட்டியது அந்த நாடுகளிடையே புலிகள் தொடர்

(6 ஆம் பக்கம் பார்க்க)

# மே நாளை சிறப்பாக கொண்டாட முன்னோடி ஏற்பாடுகள் துரிதம்

யாழ்ப்பாணம், ஏப். 16

எதிர்வரும் முதலாம் திகதி இடம்பெற உள்ள மே நாளுக்கான ஏற்பாடுகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இது தொடர்பாக தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறை விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப் பட்டிருப்பதாவது:

மேநாள் சிறப்பாகவும், மக்களது அபிலாசைகளைப் பிரதிபலிப்பதாகவும் அமையவேண்டும் என்ற நோக்கில், வெகுஜன அமைப்புகள், தொழிற் சங்கங்கள், கூட்டுறவு மற்றும் அரச கூட்டுத்தாபன ஊழியர்கள் மே நாளுக்கான முன்னோடி ஏற்பாடுகளை செய்து வருகின்றனர்.

மேநாளின் மேன்மையை— உழைக்கும் மக்களது உறுதியை — வெளிக்கொணரும் வகையில் முன்னோடிக் கருத்தரங்குகள் ஏற்பாடு செய்யப்படுகின்றன.

தமிழீழ மக்களது நாளாந்த பிரச்சினைகளைப் புறந்தள்ளி விட்டு—

தம்மால் திணிக்கப்பட்ட பொருளாதாரத் தடைகளை முற்றாக நீக்க மறுத்து—

சமாதானம் எனும் போலி முகங்காட்டி வரும் பேரினவாத ஸ்ரீலங்கா அரசின் கபடத்தினை அனைவரும் புரிந்துகொண்டு வருகின்றனர்.

இராணுவ முற்றுகைக்குள்ளாக்கப்பட்டுள்ள தமிழ் மக்களது நாளாந்த பிரச்சினைகளை, தமது மேலாதிக்க இராணுவ நலன்களுடன் இணைத்துப் பார்க்கும் ஸ்ரீலங்கா அரசினது மெய்யான நிலைப்பாட்டை எடுத்தியம்புவதாக இம்முறை மே நாள் முன்னெடுக்கப்படும்.

பேரணி, பொதுக் கூட்டம், கலை நிகழ்வுகள் யாவும் பேரினவாத கொடூரத்திலின்றும் தமிழீழ மக்கள் தம்மைத் தாமே பாதுகாப்பதை முன்னிலைப் படுத்துவதாக விளங்கும்.

வழமைபோன்று பேரணியில் ஊர்திகளும் இடம் பெறும். இன்றைய வரலாற்

(6 ஆம் பக்கம் பார்க்க)

### முச்சந்தி முரளி



விசாரணை முடிய ஆட்சிக் காலமும் முடிந்து விடும் பாருங்கோ......!

## வவுனியாவிலிருந்து மேலும் 360 அகதிகள்

### 26 ஆம் திகதி யாழ் வருவர்

தமிழகத்திலிருந்து தாயகம் திரும்பி வவுனியாவில் தங்கவைக்கப்பட்டுள்ள அகதிகளுள் 69 குடும்பங்களைச் சேர்ந்த 360 பேரைக் கொண்ட இரண்டாவது தொகுதியினர் தமது சொந்த இடங்களில் குடியமர்த்தப்படுவதற்காக எதிர்வரும் 26ஆம் திகதி யாழ்ப்பாணம் அழைத்து வரப்படுவர்.

அகதிகளுக்கான ஐ. நா. தூதுவராலயம் இவர்களை அழைத்துவரும். இவர்களை ஓமந்தையில் வைத்து தமிழர் புனர்வாழ்வுக் கழகம் பொறுப்பேற்கும்.

இவர்களுக்கான வைத்திய பரிசோதனைகளை மேற்கொண்ட பின்னர் கிளாலியில் வைத்தே சொந்த இடங்களுக்கு இவர்கள் அனுப்பி வைக்கப்படுவர்.

யாழ்ப்பாணம் அழைத்து வரப்படும் அகதிகளை தமிழர் புனர்வாழ்வு கழகமே இனி பொறுப்பேற்கும் என்று தெரிவிக்கப்படுகிறது (இ-7)

## அரசியல் பழிவாங்கல்கள் குறித்து லட்சத்துக்கு மேல் முறைப்பாடுகள்

கொழும்பு, ஏப் 16

ஐக்கிய தேசிய கட்சியின் 17 வருட கால ஆட்சியின் போது அரசியல் பழிவாங்கல்களுக்குஉள்ளானோரிடமிருந்து ஒரு லட்சத்துக்கு மேற்பட்ட முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

சுதந்திரக் [illegible]

ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சி காலத்திலேயே அரசியல் பழிவாங்கல்கள் அதிகரித்ததாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

முன்னைய அரசின் அரசியல் பழிவாங்கல்களுக்கு உட்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு என அமைக்கப்பட்டுள்ள [illegible] றும் அரசினால் அமைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை தற்போதைய அரசின் மீது குற்றச்சாட்டுகளை சுமத்தியுள்ள ஐ. தே. க. தனது ஆதரவாளர்கள் 10 ஆயிரம் பேர் வரையில் அரசியல் ரீதியில் பழிவாங்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளது. (இ-14)

## அன்னை பூபதி பொது அறிவு போட்டி

### பரிசளிப்பு விழா புதனன்று

யாழ்ப்பாணம், ஏப். 16

விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பினால் நடத்தப்பட்ட அன்னை பூபதி நினைவு பொது அறிவுத் தேர்வின் யாழ் மாவட்ட முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

இந்தத் தேர்வில் யாழ் மாவட்டத்தில் கோட்டங்களில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பு விழா எதிர்வரும் 19 ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணிக்கு உரும்பராயில் உள்ள அன்னை பூபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## ஜெயலலிதாவுக்கு எதிராக 28 லஞ்ச குற்றச்சாட்டுகள்

### ஆளுநரிடம் கருணாநிதி கையளிப்பு

தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா மற்றும் அவரது அமைச்சரவைக்கு எதிராக 28 லஞ்ச ஊழல் குற்றச்சாட்டுக்கள் அடங்கிய மனுவை மாநில ஆளுநர் டாக்டர் சென்னா ரெட்டியிடம் தி.மு.க. தலைவர் திரு. மு. கருணாநிதி நேற்றுக் கையளித்தார்.

குற்றவியல் நடைமுறையின் கீழும்— லஞ்ச ஊழல் தடுப்புச் சட்டத்தின் கீழும் — செல்வி ஜெயலலிதா மீது வழக்குத் தொடர அனுமதிக்குமாறு தி.மு.க. தலைவர் ஆளுநரை கேட்டுள்ளார்.

ஏற்கெனவே ஜெயலலிதாவுக்கு எதிராக லஞ்ச ஊழல் குற்றச்சாட்டு வழக்குத் தொடர ஜனதாத் தலைவர் சுப்பிரமணியசுவாமிக்கு ஆளுநர் அனுமதி வழங்கியது தெரிந்ததே. (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிரு ரியூசன் சென்ரர்

ஸ்ரேசன் றோட், கோண்டாவில்.

**O/L DAY CLASS**

**ஆரம்பம்: 21 - 04 - 95**

வெள்ளி காலை 8மணி

| | | |
|---|---|---|
| விஞ்ஞானம் | — | திரு. இரா. செல்வவடிவேல் |
| கணிதம் | — | திரு. மகேந்திரன் |
| ஆங்கிலம் | — | திரு. சத்தியமூர்த்தி |
| சமூகக்கல்வி | — | திரு. வேலா |
| தமிழ் | — | திரு. சிவா |
| வர்த்தகம் | — | திரு. நாதன் |
| சித்திரம் | — | திரு. அரவிந்தன் |
| சமயம | .. | திரு. பண்டிதர் |

அனுமதிகளை முன்கூட்டியே பெற்றுக் கொள்ளவும்

(சி/985)



# "A" LEVEL CENTRE

Ist Lane, Point Pedro, Road Jaffna.

**A/L 97**

கணித, உயிரியல் வகுப்புகள்

**ஆரம்பம்: 15 - 04 - 95**

Sat & sun

மேலும் விவரங்கள் நேரில்
வழமையான ஆசிரியர் குழு

[சி 982]



# முக்கிய அறிவித்தல்

## அன்னை பூபதியின் உண்ணா நோன்பு

## அழைப்பு

ஒரு இனத்தின் அரசியல் சுபீட்சத்துக்காக ஆக்கிரமிப்புக்கு எதிராக உண்ணாவிரதப் போராட்டம் நடத்தி உயிர் நீர்த்த அன்னை பூபதியின் நினைவாக 18 - 04 - 1995 காலை 7 00 மணிக்கு யாழ் கன்னாதிட்டி காளிகோயில் முன்பாக உண்ணாவிரதம் இருக்கவுள்ளோம். வட பிராந்திய யாழ் ஆங்கில மருந்து வணிகர் மன்றத்தினர் அனைவரும் தவறாமல் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மு குறிப்பு: சமூகம் கொடுக்க முடியாதவர்கள் வணிக நிலயத்தை மூடி, இவ் உண்ணாவிரதத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து கலந்துகொள்ளவும். (தங்களின் வரவு பதியப்படும்)

நன்றி:

தலைவர், செயலாளர்.

(சி-983)



# நன்றி நவிலல்

## திருமதி சிவபாக்கியம் திலகராயர்

அவர்கள் 11 - 04 - 1995 அன்று சிவபதமடைந்த செய்தி கேட்டு எமக்கு ஆறுதல் கூறி, 12 - 04 - 1995 அன்று நடைபெற்ற மரணச்சடங்கில் கலந்து கொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் யாவருக்கும் மற்றும் மலர்வளையம், அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்களுக்கும் மற்றும் மரணச் சடங்கில் பல்வேறு வகைகளில் உதவிய அனைவருக்கும் எமது குடும்பத்தின் சார்பில் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்

வி. திலகராயர் J. P
தி. கைலநாதன்
ஜெ முத்துக்குமாரசாமி

51, சந்தனமாதா வீதி,
பாண்டியன்தாழ்வு,
சுண்டிக்குளி.

[36242]



# ஈவ்லின் இரத்தினம் பல்லினப் பண்பாட்டு நிறுவனத்தில்

வண. கலாநிதி கம்பர் மாணிக்கம்
(அதிபர், தமிழ்நாடு இறையியற் கல்லூரி)
அவர்கள்

## கருத்துரை வழங்குவார்

நாளை:-
17 -04 - 95 பிற்பகல் 4 மணிக்கு

ஆர்வலர்களை அன்புடன் அழைக்கிறோம்.

இயக்குநர்
எஸ். சிவலிங்கராஜா

பல்கலைக்கழக ஒழுங்கை,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

(சி- 1021)



யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவனம்
மருதனார்மடம் - சுன்னாகம்

# இலவச விவசாய பயிற்சி நெறிகள்

எமது நிறுவனத்தினால் நடத்தப்படும் ஒருவருட கால விவசாய சான்றிதழ் பயிற்சிநெறி, இரண்டு வருட கால விவசாய டிப்பிளோமா பயிற்சி நெறிக்கான விண்ணப்ப முடிவு திகதி 25 - 04 - 95 வரை நீடிக்கப் பட்டுள்ளது என்பதை விண்ணப்பதாரிகளுக்கு அறியத் தருகின்றோம்.

— அதிபர் —
யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவனம்,
மருதனார்மடம் - சுன்னாகம்.

[36255]



# சோதி படப்பிடிப்புக் கலையகம்

இன்று இரண்டாவது அகவைக்குள் காலடி எடுத்து வைக்கும்
சோதி படப்பிடிப்புக் கலையகம்
வாடிக்கையாளர்கள், ஆதரவாளர்கள், நண்பர்கள் அனைவருக்கும் தனது புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றது.

"உங்களை உங்களுக்கே"

ஆச்சரியம் தரும் வகையில் படம் பிடித்திடவும், உங்கள் இல்லங்களில் நடைபெறும் திருமணம், பூப்புனித நீராட்டு விழா, பிறந்தநாள் விழா போன்ற இனிய நிகழ்வுகளைக் காலத்தால் அழியாத கண்ணைக் கவரும் வர்ணங்களில்

**(மிக்ஸிங் முறையில்)**

கறுப்பு வெள்ளைப் படங்களை தெளிவான முறையில் பிடித்திடவும்

நீங்கள் நாடவேண்டிய இடம்:

**"சோதி படப்பிடிப்புக் கலையகம்"**

காங்கேசன்துறைச்சாலை, மல்லாகம்.

(8324



# VALEDICTORY FUNCTION

of the

**CHRISTIAN THEOLOGICAL SEMINARY**
**CHUNNAKAM**

Will take Place
at 4-00 p. m. on Tuesday, April 18, 1995
at the Uduvil Girls' College

**THE REV. P. KAMBAR MANICKAM**
(Principal Tamil Nadu Theological Seminary, Madurai)
Will deliver the Valedictory Address

**THE R.T. REV. DR. S. JEBANESAN**
(Chairman, Governing Council, CTS)
will give away the Diplomas and Prizes

**All are Cordially Invited**

REV. D. S. THIAGARAJAH,
Principal, C T S

[C-981]


## வெள்ளி விழா

யாழ்ப்பாணம், ஏப். 16

காரைநகர் வாரிவளவு நல்லியக்க சபையின் 25ஆவது வருட நிறைவு விழா—வெள்ளி விழாவும் காரைநகர் மாணவர்களை பாராட்டி பரிசளிக்கும் நிகழ்வும் நாளை திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ். இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் திரு. கந்தையா சதாசிவம் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மருத்துவபீட பீடாதிபதி பேராசிரியர் ச. வை. பரமேஸ்வரனும் சிறப்பு விருந்தினராக வலயம் இரண்டின் கல்விப்பணிப்பாளர் திரு. கே. கந்தசாமியும் கலந்து கொள்வர்.

விழாவில் முன்பள்ளி மாணவர்கள் பங்கு கொள்ளும் அப்பியாசப் போட்டிகள், நடனப் போட்டிகள் என்பனவும் வயலினிசை "கவியரங்கம் என்பனவும் பரிசளிப்பும் இடம்பெறும். (ஒ 14)

## விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்மாவட்ட பாடசாலைகள் விளையாட்டு அபிவிருத்திக் குழு நடத்தும் மாவட்ட நிலை கரப்பந்து சுற்றுப் போட்டிகள் நாளை திங்கட்கிழமை ஆரம்பமாகும்.

ஆறு உப மாவட்டங்களிலிருந்தும் தெரிவு செய்யப்பட்ட முதல் மூன்று அணிகள் மாவட்ட நிலைப் போட்டிகளில் பங்கு பற்றுகின்றன.

★ ★ ★

கொக்குவில் மத்திய ச. ச. நிலையம் கே. வி. வி. கிண்ணத்துக்காக — கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடத்திவரும் கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் இன்று நடைபெறவுள்ள ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் பின்வருமாறு:-

★ காலை 8. 30 மணி — ஸ்ரான்லி வி. க. அணி எதிர் மானிப்பாய் பரிஸ் அணி

★ பிற்பகல் ஒரு மணி — கொக்குவில் 'ஏ' அணி எதிர் ஒக்ட் கேரல்ட்ஸ் அணி

## இன்று

யாழ்ப்பாணம், ஏப். 16

ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசாலையின் பவள விழா இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு பாடசாலை மைதானத்தில் திரு. மு. ஞானப்பிரகாசம் தலைமையில் நடைபெறும். (ஒ 14)

★ ★ ★

வலிகாமம் மேற்கு கலாசார பேரவையின் புது வருட கலை விழா சங்கானை கலாசார மண்டபத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணியளவில் பிரதேச செயலர் திரு கா. சந்திரராசா தலைமையில் நடைறும். (ஒ-14)


# சிவகாமி

கல்வி நிலையம்
சாவச்சேரி.

**97** கலை வர்த்தக வகுப்புகள்

எமது வழமையான ஆசிரியர் குழுவினால் ஆரம்பமாகின்றன.

**1995 - 04 - 20**

வியாழன் காலை 8-00

[8325]


## இசை அரங்கு

யாழ்ப்பாணம் ஏப் 16

நல்லூர் பண்டாரக்குளம் மருதவளவு ஸ்ரீ விநாயகர் ஆலய உற்சவத்தை ஒட்டி நடைபெறும் தெய்வீக இசையரங்கு நிகழ்வின் இறுதி நாளான இன்று ஞாயிற்றுக்கிழமை இரவு 8 மணிக்கு அ. இ. த. ம. மாணவர்களின் தாள வாத்தியமும் இரவு 8 45 மணிக்கு திரு. அ. நமசிவாயத்தின் புல்லாங்குழல் கச்சேரியும் இடம்பெறும். (ஒ-14-111)

★ ★ ★

யாழ்ப்பாணம் ஏப். 16

யாழ். வண்ணை ஸ்ரீ காமாட்சி அம்பாள் ஆலய மகோற்சவத்தை முன்னிட்டு ஸ்ரீ காமாட்சி சனசமூக நிலையம் நடத்தி வரும் ஸ்ரீ காமாட்சி இசை அரங்கு இறுதி நாள் நிகழ்வும் பரிசளிப்பு விழாவும் இன்று ஞாயிற்றுக் கிழமை நடைபெறும்.

செல்வன் அ. விக்கினேஸ்வரனின் பாட்டும், செல்வன்கள் க. நந்தகுமார், ந. சதீஸ்குமார் கு. சுரேஸ், தி. சூரியகுமார், ப கேசவன், பா. பாலகுமார் வி. பிரபாகர சர்மா ஆகியோரின் துணை வாத்தியக் கச்சேரியும் இடம்பெறும். (ஒ-14)

## ஆலயங்களில்

தெல்லி மாநகர் ஸ்ரீ காசி விநாயகர் ஆலய 23 ஆவது ஆண்டு மகோற்சவம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும். தொடர்ந்து 24 ஆம் திகதி திங்கட்கிழமை இரதோற்சவமும் மறுநாள் தீர்த்தோற்சவமும் இடம் பெறும்.


# O/L DAY CLASSES

பகல்நேர வகுப்புக்கள்
புதிய பிரிவு

ஆரம்பம்;
**17 - 4 - 95**
காலை 8 மணி

கணிதம்
திரு. சங்கர்
விஞ்ஞானம்
இரா. செல்வவடிவேல்
ஏனைய பாடங்களும் நடைபெறும்.

**புதிய உயர் கல்லூரி**
ஆரியகுளம் சந்தி,
யாழப்பாணம்.

(சி-1020)



# ஏழாலையின் அருட் செல்வர்



"திருநெறியத் தமிழ்ச் செம்மல்"
**திரு. சிவசண்முகவடிவேல்**
அவர்கள்

ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியா சாலையின் இன்று நடைபெறும் பவள விழாவில் பாடசாலையின் பிரசித்தி பெற்ற மாணவரில் ஒருவரும், ஏழாலை முத்தமிழ் மன்ற ஸ்தாபகரும், ஆரம்பகால தலைவருமான திருநெறியத் தமிழ்ச் செம்மல் திரு. சிவசண்முகவடிவேல் அவர்களை கௌரவிப்பதையிட்டு எமது மகிழ்ச்சியையும், வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

— ஏழாலை முத்தமிழ் மன்றம்

[36252]



# SCIENCE COLLEGE
## விஞ்ஞானக் கல்லூரி

பெருமாள் கோயில் வீதி, யாழ்ப்பாணம்.

**97-A/L** கணித, உயிரியல் ) பிரிவுகள்

(புதிய பாடத்திட்டத்திற்கு அமைவாக)

| | | |
|---|---|---|
| CHEMISTRY | — | திரு. மகாதேவா B.Sc [Cey ] Dip in-Ed. |
| PHYSICS | — | திரு. ஜெயசீலன் B.Sc [Hons] Dip - in- Ed. |
| RURE-APP | — | திரு. குணசிங்கம் B Sc [Hons] |
| ZOOLOGY | — | ஈஸ்வரதாசன் B Sc [Cey.] Dip-in-Ed. |
| BOTANY | — | திரு. சிறிகரன் B Sc [Ce y] Dip-in-Ed. |



# P'- NEWSCIENCE CENTRE
## P'- நியு சயன்ஸ் சென்ரர்

எழிலகம் முன், யாழ்ப்பாணம்.

**97-A/L** கணித, உயிரியல் ) பிரிவுகள்

(புதிய பாடத்திட்டத்திற்கு அமைவாக)

| | | |
|---|---|---|
| ZOOLOGY | — | திரு. ஈஸ்வரதாசன் |
| BOTANY | — | திரு. பாலா |
| CHEMISTRY | — | திரு. செல்வா<br>திரு. மகேஸ்வரன் |
| PHYSICS | — | திரு. ஜெயசீலன்<br>திரு. குமரன்<br>திரு. மோகன் |
| PURE-APP | — | திரு. குணசிங்கம் |

(சி-1013)



# புதிய உயர் கல்லூரி
## (NEW COLLEGE OF HIGHER STUDIES)

ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

G. C. E.

**A/L 97**

கலை - வர்த்தக பிரிவுகள்

**ஆரம்பம்: 23 - 04 - 95**

(ஞாயிறு காலை 9 மணி)

★ திங்கள் (17-04-95) தொடக்கம் வெள்ளி (21-04-95)வரை அனுமதிகள் வழங்கப்படும்.

★ மாணவர் தொகை வரையறுக்கப்பட்டுள்ளதால் பதிவுகளை முன் கூட்டியே செய்து கொள்ளவும்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பொருளியல் | — | திரு. மகேந்திரன் | தமிழ் | — | திரு. குழந்தை |
| கணக்கியல் | — | திரு. உருத்திரசிங்கம் | இந்துநாகரீகம் | — | திருமதி அருள்நங்கை |
| வர்த்தகம் | — | திரு. சத்தியதாசன் | இந்துசமயம் | — | திரு. கிரிதரன் |
| அளவையியல் | — | திரு. சோதிலிங்கம் | புவியியல் | — | கலாநிதி குணராஜா<br>திரு. சண்முகராஜா |
| அரசியல் | — | திரு. கியூபேட் | கிறீஸ்தவ நாகரீகம் | — | திரு. S.S.P.A.D. |
| நாடகமும்-அரங்கியலும் | — | திரு. குழந்தை சண்முகலிங்கம் | | | |
| வரலாறு | — | திரு. சின்னராஜா | சித்திரம் | — | திரு. சிவப்பிரகாசம் |

(சி/986)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறிவித்தல்

கொக்குவில் மேற்கு மஞ்சவனப்பதி முருகன் ஆலய மகாசபை அங்கத்தவர்கள் சந்தாப்பணம்

**யுவ வருடம் (14-4-95 - 12-4-96)**

மேற்படி ஆலய மகாசபை அங்கத்தவர்களாக ஏற்கனவே சேர்ந்த அனைவரையும் யுவ வருடத்திற்கான (14-4-95 — 12-4-96) சந்தாப் பணமாக ரூபா 100/-ஐ ஆலயப் பணிமனையில் 20-5-95க்கு (ஆங்கில) முன்பாக செலுத்தி தங்கள் அங்கத்துவத்தைப் புதுப்பித்துக்கொள்ளுமாறு பணிவன்புடன் வேண்டுகிறோம்.

புதிதாக அங்கத்தவர்களாகச் சேர விரும்புபவர்கள் அதற்கான விவரத்தை ஆலயப் பணிமனையில் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுகிறார்கள்.

ஆயுட்கால அங்கத்துவப் பணம் ரூபா 1000/-.

நன்றி.

ஆலய சேவையில்
அ. பத்மநாதன்,
செயலாளர்,
நிர்வாக சபை.

மஞ்சவனப்பதி முருகன் ஆலயம்,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில். (36215)

## பழைய செய்தித்தாள்களுக்கான கேள்வி அறிவித்தல்

1972ஆம் ஆண்டிலிருந்து 1976ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் பிரசுரமாகி வெளிவந்த அனைத்துப் பத்திரிகைகளுக்குமான கேள்விகள் கோரப்படுகின்றன.

இக் காலப் பகுதியில் தங்களினால் சேகரிக்கப் பட்டுள்ள;

1. ஈழநாடு 2. வீரகேசரி
3. தினகரன் 4. தினபதி
5. சுதந்திரன்
6. ஏனைய பிற பத்திரிகைகள்; [குறைந்த எண்ணிக்கையாக இருப்பினும்] இருப்பின் அதற்கான பெறுமதியைக் குறிப்பிட்டு மொத்தம் எவ்வளவு உண்டு என்பதை முழு விவரத்துடன் 1-5-1995இற்கு முன் அறியத்தரவும்.

தொடர்பு கொள்வேண்டிய முகவரி:
**மாவீரர் படிப்பகம்,**
பலாலி வீதி, கோண்டாவில்.
[36202]

## கலை வர்த்தகக் கல்லூரி
# C. C. A.

வெலிங்டன் சந்திக்கு அருகில், யாழ்ப்பாணம்.

**A/L - 97**

**ஆரம்பம்: 16 - 04 - 1995**
காலை 8-00 மணி

எமது ஆசிரியர் குழு

| | |
|---|---|
| பொருளியல்: | — திரு. உதயன் |
| கணக்கியல்: | — திரு. ஸ்ரீ |
| வர்த்தகம்: | — திரு. இரட்ணம் |
| அளவையியல்: | — திரு. சயந்தன் |
| தமிழ் | — திரு. கணேஸ் |
| இந்து நாகரிகம் | — திரு ஜோதீஸ்வரன் |
| புவியியல் | — திரு. வேலா |
| இந்து சமயம் | — திரு. ஜோதீஸ் |
| அரசியல் | — திரு. பஞ்சு |
| கிறிஸ்தவம் | — திரு. நோபேட் |
| நாடகமும் அரங்கியலும் | — திரு. திலகநாதன் |

குறிப்பு:
★ மாணவர் எண்ணிக்கை வரையறுக்கப்பட்டுள்ளமையால் பதிவு செய்து உங்கள் அனுமதியை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.
★ கலை, வர்த்தகத்திற்கு தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழுவினால் கற்பிக்கப்படுகின்றது.
★ நேர அட்டவணையை காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளவும்.

நிர்வாகி.
[சி-1011]

## நன்றி நவிலல்

அமரர்
**பரமேஸ்வரி முத்துக்குமாரசாமி**

09 - 04 - 1995 இல் காலமாகிய திருமதி பரமேஸ்வரி முத்துக்குமாரசாமி அவர்கள் நோய்வாய்ப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்ற பொழுது அவருக்குத் தேவையான சிகிச்சை அளித்துப் பராமரித்த வைத்திய நிபுணர், வைத்தியர்கள், தாதிமார் மற்றும் சக ஊழியர்கள் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

டாக்டர். ச. முத்துக்குமாரசாமி
(கணவன்)

31/3 செட்டித்தெரு,
நல்லூர். (36227)

## விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

கலை, வர்த்தகம் வகுப்புக்கள் **97**

**ஆரம்பம்: 23 - 04 - 95**
காலை 9மணி

எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழு

| | |
|---|---|
| பொருளியல் | — திரு. லோகலிங்கம் |
| வர்த்தகம் | — திரு. வரதன் |
| கணக்கியல் | — திரு. கலைச்செல்வன் |
| அளவையியல் | — திரு. விக்கி |
| தமிழ் | — திரு. குழந்தை |
| இந்துநாகரிகம் இந்துசமயம் | — திரு. காரை சுந்தரம்பிள்ளை |
| புவியியல் | — திரு. குணராசா |
| அரசியல் | — திரு சிலன் |
| கிறிஸ்தவம் | — திரு. வசந்தன் |
| வரலாறு | — திரு. பிரகலாதன் |
| நாடகமும் அரங்கியலும் | — திரு. சத்தியா |

★ அனுமதிகள் வரையறுக்கப்பட்டுள்ளதால் அனுமதிகளை முன் கூட்டியே பெற்றுக்கொள்ளவும்.
(சி-1009)

## NEW MASTER INSTITUTE

B. M. C. Lane, Jaffna.

**97 A/L**

கணித விஞ்ஞான, வகுப்புக்கள்

PHYSICS CHEMISTRY
BOTANY ZOOLOGY
PURE / APP. MATHS

[எமது வழமையான ஆசிரியர் குழு]

**ஆரம்பம்: 30 - 04 - 1995**

மேலதிக விவரங்களை காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளவும்.
[சி-980]

## A\L 97


விஞ்ஞான – வர்த்தக - கலைப்பிரிவுகள்
(மாணவர்கள் பாடசாலையில் தாம் விஞ்ஞானப்பிரிவா? வர்த்தகப்பிரிவா? கலைப்பிரிவா? என்பதைத் தீர்மானிப்பதற்காக)

ஆரம்பம்: **29 - 04 - 95** [சனி]

**பொண்ட் (BOND) கல்வி நிறுவனம்**
58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(8488)

## அந்தியேட்டி அழைப்பு

(1995—04 –16 ஞாயிற்றுக்கிழமை)



**திருமதி மனோன்மணி நடராசா**

மலர்வு: 1933-02-22
உதிர்வு: 1995-03-15

இன்று நடைபெறும், அமரத்துவமடைந்த எங்கள் குல விளக்கு மனோன்மணி நடராசா அவர்களது அந்தியேட்டிக்கிரியைகளிலும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனைகளிலும் அவற்றைத் தொடர்ந்து நடைபெறவுள்ள மதியபோசன விருந்திலும், கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்,

— குடும்பத்தினர்.

தைலங்கடவை,
குப்பிழான்,
ஏழாலை.

## புலிகளின் குரல் வானொலியில்

16 - 04 - 1995
ஞாயிறு இரவு
★ 8-02 — இசையரங்கம்– உ. இராதாகிருஷ்ணனின் வயலின் ஷோலோ கச்சேரி
★ 8-30 — செய்திகள்
★ 8-40 — தொடர் நாடகம் — கருணைரவி எழுதும் ''காணிநிலம் வேண்டும்'' அங்கம்— 07

17 — 04 - 1995
திங்கள் காலை
★ 7-02 — மாவீரவணக்கம்
★ 7-15 — நீங்கள் கேட்டவை
★ 7-30 — செய்திகள்
★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
★ 7-40 — நீங்கள் கேட்டவை நிகழ்ச்சின் தொடர்ச்சி

## தமிழீழ வானொலி

ஒலிபரப்பு
ஞாயிறு மாலை
★ 5-01 — சிந்தனைச் சிதறல்
★ 5-02 — எழுச்சிகீதம்
★ 5-10 புதியவை
★ 5-15 — மழலைகளுக்காக
★ 5-30 — கதம்பம்
★ 6-00 — சிந்தனைக்குச் சிலவினாடிகள்
★ 6-02 — உங்கள் தெரிவு

## அவசரமாக இரத்தம் தேவை

யாழ் போதனா வைத்தியசாலை குருதி வைப்பகத்தில் 'பி' நெகடிவ் (B-) குருதி மிக அவசரமாக தேவைப்படுவதால் சேவையுள்ளம் கொண்டோர் யாழ்.போதனா வைத்தியசாலை நோயாளர் நலன் புரிசங்க செயலகத்துடன் தொடர்பு கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (ஒ-14)

## தொலைக்கல்வி அமர்வுகள்

மருதனார்மடம் தொலைக்கல்வி நிலையத்தில் பயிற்சி பெறும் பயிலுநர் ஆசிரியர்களுக்கு நாளை 17 ஆம் திகதி முதல் 21 ஆம் திகதி வரை 5 நாள்கள் தொடர் அமர்வுகள் நடைபெறும்.

## SPOKEN ENGLISH With GRAMMAR

திரு. சத்தியமூர்த்தி

பிரிவு I
சனி ஞாயிறு ) 1-00

பிரிவு II
புதன் வெள்ளி ) 1-00

இரு பிரிவுகளாக
ஆரம்பம்:
**15 - 04 - 95**

**BOND**
கல்வி நிறுவனம்
யாழ்ப்பாணம்.
[8483]

## விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

(O/L வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)

**O/L**
DAY CLASSES (8 — 2)
EVENING CLASSES (4 — 6)
SAT. SUN CLASSES 8 — 2)

புதிய பிரிவுகள்
**ஆரம்பம்: 20 - 04 - 1995**
(வியாழன்) காலை 8 மணி

எமது ஆசிரியர் குழு

| | |
|---|---|
| விஞ்ஞானம் | — திரு. J R. சூரி |
| சமூகக்கல்வி | — திரு. கோபி |
| ஆங்கிலம் | — திரு. விஸ்வநாதன் |
| சமயம் | — திரு. சங்கர் |
| கணிதம் | — திரு. தயாளன் |
| தமிழ் | — திரு. பிரதீப், திரு. திருப்பதி |
| வர்த்தகம் | — திரு. கருணாகரன் |

★ புதிய அனுமதிகள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.
(சி-1010)

## பொண்ட் கல்வி நிறுவனம்

58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

**O/L DAY CLASS**
(காலை 8-00 மணிமுதல் பி. ப. 2-00 மணிவரை மாதாந்தப் பயிற்சிப் பரீட்சைகளுடன்)

**ஆரம்பம்: 18 - 04 - 1995**
(8489)

நல்லூர்
## இளங்கலைஞர் மண்டபத்தில்

அரங்க ஆற்றுகை - 3

★ பாலுக்குப் பாலகன்
★ ஆதிரை நோக்கேன்
★ கூர்

இவை
நாடக அரங்க கல்லூரியின்
சிறுவர், கல்வி, பெண்ணியம் பற்றிய அரங்கத் தயாரிப்புக்கள்.

இன்று காலை 10 மணி, மாலை 4 மணி
பிரவேசம் 20 ரூபா மட்டும்

விளம்பர உதவி:
**ராஜா குளிர் சுவையகம்,**
யாழ்ப்பாணம்.
(36246)

தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்
யாழ். கோட்டம்

## முக்கிய அறிவித்தல்

17 - 4 - 1995 திங்கட்கிழமை அன்னை பூபதி நினைவு விழா நடைபெறவிருப்பதனால் அன்றைய தினம்

நண்பகல் 12-00 மணிக்கு பின்னர் உள்ள சகல வகுப்புகளும்

நிறுத்தப்பட்டுள்ளன என்பதை அறியத் தருகின்றேன் திங்கள் மாலை 5-00 மணிக்கு யாழ். ரஸிக ரஞ்சன சபா மண்டபத்தில் நடைபெறவுள்ள விழாவுக்கு அனைத்து உறுப்பினரும் தவறாது சமுகமளிக்க வேண்டும் எனவும் கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

தலைவர்
— யாழ். கோட்டம்
(சி/1018)

## திருமண விருந்தழைப்பு

**நடனசபாபதிப்பிள்ளை தேவராசா (கண்ணன்)**
அவர்களுக்கும்
[ஸ்ரீ கண்ணன் ஸ்ரோரஸ், லண்டன்]
திரு. திருமதி குலசேகரம் அவர்களின் புதல்வி
**நவமலர் (மலர்)**
அவர்களுக்கும்

நிகழும் யுவ ஆண்டு சித்திரைத் திங்கள் 3 ஆம் நாள் [16 - 04 - 95] ஞாயிற்றுக்கிழமை 10-30 மணிக்கு, லண்டனிலுள்ள உயர்வாசற்குன்று முருகன் ஆலய கல்யாண மண்டபத்தில் திருமணம் நிகழத் திருவருள் கூட்டியுள்ளது.

அன்று எமது இல்லத்தில திருமண நினைவாக நாம் அளிக்கும் மதிய போசன விருந்தில் கலந்து சிறப்பித்து எமமை மகிழ்வித்து ஏகுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

784/1, பலாலி வீதி,
திருநெல்வேலிச் சந்தி,
யாழ்ப்பாணம்.

தங்கள் வரவை நாடும்;
ந. ஸ்ரீஸ்கந்தராசாவும், பாரியாரும்.
(நியூ ஸ்ரீ கண்ணன் ஸ்ரோர்ஸ், திருநெல்வேலி)
[36244]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

அல்சேஷன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. இன்று [16-4-95] பிற்பகல் தொடக்கம் தொடர்பு கொள்ளவும். நீக்கலஸ், நாச்சாண்டி ஒழுங்கை, கல்லூரி ஒழுங்கை, வட்டுக்கோட்டை. [36181]

லுமாலா லேடீஸ் சைக்கிள் வீட்டுத் தளபாடங்கள், கோழிக்கூடு விற்பனைக்குண்டு. 1010/9, கே. கே. எஸ். வீதி, (தலையாழி ஒழுங்கை), யாழ்ப்பாணம். [36208]

அடைவைக்கக் கூடிய நல்லினக் கோழிமுட்டைகள், இதரை வாழைக் குட்டிகள் எப்பொழுதும் பெற்றுக்கொள்ளலாம். நல்லூர் வீடியோ சென்ரர், முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். [36239]

பறவையினங்கள் Finches - பின்ரஸஸ் Vangarlie–வங்காலி Diamond Dore - புறா கூட்டுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: S. ராஜன், 'புவனகிரி', சம்பியன் லேன், கொக்குவில் [36199]

லாம் பிரேட்டா ஸ்கூட்டர் சிரமைக்கப்பட்ட நல்ல நிலையில் உள்ளது விற்பனைக்கு உண்டு. தொடர்பு: S ராஜன், 'புவனகிரி', சம்பியன் லேன், கொக்குவில், [36200]

புதிய ஹொண்டா [Honda] தன்னியக்க பெண்கள் மோட்டார் சைக்கிளும், ஆண்கள் றலி சைக்கிளும் உடன் விற்பனைக்குண்டு. இல. 418, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். [36214]

திருநெல்வேலி கலாசாலை வீதியில் வீட்டுடன் கூடிய 3 பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: A. S. சாந்தன், கலாசாலை வீதி, திருநெல்வேலி வடக்கு, யாழ்ப்பாணம். [8486]

நல்லின சுருள்முடி Alsation நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இ ரவீந்திரன் ஞானவயிரவர் கோயிலடி, அட்டுடை. (Black&White மைதானம் அருகில்) (36196)

## வீடு வளவு விற்பனைக்கு

சுண்டிக்குளி மகளிர் கல்லூரிக்கு அண்மையில் கொழும்புத்துறை வீதியில் நல்ல குடிநீருடன் 3 பரப்புக் காணியில் விசாலமான வீடு ஒன்றுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்க: க. ரஞ்சினி 8, பிளர்ச்சஸ் ஒழுங்கை, சுண்டிக்குளி. (36204)

## புலமைப் பரிசில் - 1995

ஆண்டு 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கான புதிய பாடத்திட்டத்திற்கேற்ப பயிற்சி வினாத்தாள்களும், வீட்டிலிருந்தபடியே படிக்க வசதியாக வக்குளிப்பு பயிற்சிகளும் விடைகளுடன் எம்மிடம் / புத்தக நிறுவனங்களில் / தபாலில் பெற்றுக் கொள்ளலாம். Bond, 58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் [8484]

## O/L கணிதம்

Credit Distinction பெறுவோரடைவதற்கு ஆரம்பத்திலிருந்து விசேடமாக ஆரம்பத்திலிருந்து வாரத்திற்கு ஐந்து மணித்தியாலங்கள் (ஆண்டு- 9 10 உட்பட) B. Sc ஆசிரியரால் கற்பிக்கப்படும். 85, மணல்தறை லேன், திருநெல்வேலி. [36247]

## இறைச்சிக்கோழி விற்பனை

Broiler மற்றும் இறைச்சிக் கோழிகள் தினமும் காலை 7 மணி தொடக்கம் சுத்தம் செய்து பெற்றுக்கொள்ளலாம். எங்கள் ஸ்தாபனத்திற்கு முகப்பில் இருக்கும் விற்பனை நிலையம் எங்களுடையதல்ல. உங்கள் வசதிக்காக எங்கள் வாசலில் Nallur Video Centre பெயர்ப் பலகை உண்டு. நல்லூர் வீடியோ சென்ரர். (36206)

## மணமக்கள் தேவை

செவ்வாய் குற்றமற்ற 31 வயது, எக்கவுண்டனுக்கும் 40 வயது, பாம் மனேஜருக்கும், 39 வயது ஆசிரியருக்கும், 36 வயது ஆசிரியைக்கும், தேவை. மங்கள ஏஜென்சி, கொய்யாத் தோட்டம். [36226]

## மணப்பெண் தேவை

உத்தரம் 1 ஆம் பாதம், 5 அடி 4அங் உயரம், 36 வயது, வெளிநாட்டில் வேலை பார்க்கும் செவ்வாய்க் குற்றமற்ற MB B.S டாக்டருக்கு, பட்டதாரிகள் / அதற்கு மேற்பட்ட சராதரமுள்ள அழகிய மணமகளைத் தேடுகின்றனர். முழு விபரங்களுடனும், சாதகக் குறிப்புடனும் கடித மூலம் தொடர்பு கொள்ளவும் இல: 780 C/o உதயன், யாழ்ப்பாணம். [36161]

## புதுவருடப் பலன்

1995 யுவ வருஷ எல்லா ராசிப் பலன்களும் வியாழ வக்கிரமும், ரூ 1/- கணிப்பு (சதியா) எங்கும் கிடைக்கும் பாடசாலை உபகரணங்களுக்கு ஆனந்த்ஸ் புத்தக நிலையம் 21/B மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். [36240]

## கோழிக்குஞ்சு விநியோகம்

Prima Lahmann White பேட்டுக் குஞ்சுகள் விற்பனைக்கு உண்டு Prima Broiler குஞ்சுகள் பதிவு செய்து திங்கள் வியாழக்கிழமைகளில் பெற்றுக்கொள்ளலாம். நல்லூர் வீடியோ சென்ரர், 19 முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். [36207]


## கலை வர்த்தக கல்லூரி

C. C. A.

மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

A/L 95

பகல்நேர வகுப்பு [Day Class]

வர்த்தகமும் நிதியும் மீட்டல் வகுப்பு

ஆசிரியர்

திரு. க. சத்தியதாசன்

ஆரம்பம்:

17-04-95 (திங்கள்)

நேரம்: 11 — 12

வாரத்தில் நான்கு நாட்கள் வகுப்புக்கள் நடைபெறும்

நிர்வாகி.

(சி-1008)



## O/L - 94 பரீட்சையில்

அதியுயர் பெறுபேறுகளைப் பெற்று சாதனை படைத்த எமது நிறுவன மாணவர்களுக்கு பாராட்டுகள் பல

O/L - 95 DAY CLASS

வாரத்தில் 6 நாட்கள்

காலை 8-00 — பி. ப. 1 மணி வரை

★ நிறுவன மாணவர்களின் கடந்த கால பெறுபேறுகள் நிகழ் காலத்திற்கு சான்றாகும்.

ஏப்ரல் 20 இல் ஆரம்பமாகிறது

ESTD: 1973 REGD: No J/7993

The Express Institute

IRUPALAI - KOPAY

(36245)



# BECON

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

## A\L 97 கலை, வர்த்தகம்

எமது நிறுவனத்தில் கற்க விரும்பும் மாணவர்களின் தொகையோ வரையறையற்றது.

ஆனால்

எமது ஆசிரியர்களின் நேரங்களோ வரையறுக்கப்பட்டது

இம் முறை

இரண்டு பிரிவுகள் மட்டுமே!

ஆரம்பம்: 06-05-1995

சனி 8-00 a. m.

முன்கூட்டியே பெயர்களைப் பதிவு செய்வதன் மூலம் அனுமதியை உறுதிப்படுத்திக் கொள்ளவும்

(சி/1014)



# வெளிநாட்டு வேலைவாய்ப்பு

## டோகா, கட்டார் - சிங்கப்பூர்

டோகா கட்டார்:-

| | | | |
|---|---|---|---|
| சிவில் எஞ்சினியர் | — 2 பேர் | — 28,000/- | சாப்பாடு இல்லை தங்குமிடம் மெடிக்கல் இலவசம் |
| மெக்கானிக்கல் எஞ்சினியர் | — 2 பேர் | — 28,000/- | |
| எலக்றிக்கல் எஞ்சினியர் | — 2 பேர் | — 28 000/- | |
| சட்டட போமன் | — 2 பேர் | — 18,000/- | |
| மேசன் | — 10 பேர் | — 10,000/- | |
| தச்சு வேலை | — 10 பேர் | — 10,000/- | |
| மாபிள் பதிப்பவர் | — 10 பேர் | — 10,000/- | |
| வீட்டு ட்ரைவர் | — 10 பேர் | — 7 000/- | சாப்பாடு, மெடிக்கல், தங்குமிடம் இலவசம் |
| வீட்டுப்பணிப் பெண்கள் | — 50 பேர் | — 5,600/- | |

வயது 30 — 40 வயதுவரை, 1 மாதத்தில் பிரயாணம்

## சிங்கப்பூர் வீட்டுப் பணிப்பெண்கள்

வயது 22 — 32 வரை ஆங்கிலம் பேசத்தெரிய வேண்டும். ஒரு வாரத்தில் பயணம். சம்பளம் 7 500/- வீட்டுப் பணிப்பெண்களுக்கு 5,200/- மட்டும். கட்டுப்பணம் சிங்கப்பூர் பணிப்பெண்களுக்கு 24 ஆம், 25ஆம திகதிகளில் காரியாலயத்தில் நேர்முகப் பரீட்சை நடைபெறும். நேரில் வரவும். மற்றவர்கள் பாஸ்போர்ட் கொப்பி 6 படங்களுடன் விண்ணப்பிக்கவும்.

THUSHARA TRAVELS & TOURS (PVT) LTD.

135, E. I/2, Galle Road,
Dehiwala. T. P. 730913

[36241]


# 45ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர் சிவா

மலர்வு: 14 - 07 - 1958

உதிர்வு: 02 - 03 - 1995

திருமதி மாலினி

மலர்வு: 06 - 01 - 1961

உதிர்வு: 02 - 03 - 1995

மாலினி, நீ எங்கே இருக்கிறாய்
உன்னை தேடி தேடி எங்கள் விழிகள் கனக்கின்றன
உன் சிரிப்பு சிந்தனை, பகிடி எல்லாம் எம் நெஞ்சில் ......ஓ.....
நீயும் உன் கணவனும் அன்றிலைப்போல் என்பாயே
அதுதான் காலன் இருவரையும் கவர்ந்தானோ!
உம் மறைவு வெறும் கனவுதான் என்றிருந்தோம்
அது நனவென்று அமையாது .... ஓ ...

உம் பிரிவால் துயருறும்;
யாழ். [illegible] நண்பிகள்.

[36250]

# கண்ணீர் அஞ்சலி



தாயின் மடியில்: 13 — 08 — 1956

ஆண்டவன் அடியில்: 07 — 12 — 1994

## திருமதி ஜெறோம் ஜெய்சி

என்னுயிரே என்னைவிட்டு எங்கு சென்றாய்?
கடந்த மார்கழி 7 ஆம் திகதி மாலை என்னைத்-தனியே
இவ்வுலகில் விட்டு விட்டுச் சென்று விட்டாய்!
தன்னந்தனியாக என்னைவிட்டுப் போய்விட்டாயே
காலங்கள் மாறும் ஆனால் இந்தக் காட்சி ஒருபோதும்-மாறாதம்மா
என் இதயத்தில் ஓர் அறையில் உன்னை வைத்து-பாதுகாத்தேன்
என்னை ஓர் குழந்தைபோல் பார்த்தாய் ஆனால்..
எனக்கு மனைவியாய் ஒரு தாய்போல் எனைப்-பராமரித்தாய்
உன் பிரிவுச் செய்தியை என்னால் தாங்கமுடியாதம்மா
நான் ஓர் அநாதையாகிவிட்டேன்
இனிஎன்னை அரவணைத்துக் காக்க உலகில் எவருமே-இல்லையம்மா!
என் கனவிலும் நான் இதை எதிர்பார்க்கவில்லை
உன் தந்தை, மாமி, சகோத சகோதரிகள்
அன்பு மைத்துனர், மைத்துனிமார், அனைவரையும்-தன்னந்தனியே!
உறவு என்ற பாசறையில் விட்டுவிட்டுச்-சென்றுவிட்டாய்
எனது கண்ணீர்தான் இனி எனக்கு ஆறுதல்
கடவுள் தான் எனது வழிகாட்டி! என்னதான்-இருந்தாலும்
உன்பிரிவை என்னால் தாங்க முடியாது
என்னைத் தனியே விட்டுச் சென்ற உனது ஆத்மா
சாந்தியடைய நான் தினமும் எந்நேரமும் இறைவனை-வேண்டுகிறேன்


எனது மனைவியின் இறுதிச் சடங்குகளில் பங்கு பற்றிய உற்றார், உறவினர், நண்பர்கள், மதகுருமார்கள், கன்னியாஸ்திரிகள் அனைவருக்கும் என் இரு கை கூப்பி என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவரின் பிரிவால் துயருறும்:
அன்புக் கணவர்
R. A. ஜெறோம் (யேமேகர்)

கூழாவடி. கிழக்குஒழுங்கை.
ஆனைக்கோட்டை.

[சி-979]

# ஓராண்டு நினைவஞ்சலி



அமரர்

## டாக்டர் அ. வைத்தியலிங்கம்

(பாலாவோடை களபூமி காரைநகர்)

பூர்வபட்ச பிரதமை திதி:

தோற்றம்: 09 — 02 — 1922

மறைவு: 26 — 04 — 1994

அன்பின் சிகரமாய்
பாசத்தின் உறைவிடமாய்
குடும்பத்தின் வழிகாட்டியாய்
சமூகத்தின் சேவகனாய்
வாழ்ந்து இறையடி சேர்ந்தும்
எம் மனங்களில் நிலைத்து வாழும் நண்பனே!
ஓர் ஆண்டு காலம் பிரிந்தாலென்ன?
ஓர் ஆயிரம் ஆண்டு காலம் சென்றாலென்ன
உங்கள் நினைவலைகள் எம்மை விட்டகலா.

செ. அம்பிகைபாகன் குடும்பம்,
மா. தயானந்தன் குடும்பம்;
செல்வி. வீ. பரமேஸ்வரி

இல. 38 கோயில் வீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

[36248]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
202/2 காங்கேசன் வீதி
யாழ்ப்பாணம்

## இன்றைய கேள்வி!

ஐம்பது ஆண்டு காலத்துக்கு மேல் புரையோடிப் போயிருக்கும் இலங்கையின் இனப்பிரச்சினை இன்று முக்கியமான ஒரு கட்டத்தை அடைந்திருக்கிறது.

நாட்டை பிளவுபடுத்தி, தமிழர் தாயகமும், சிங்கள தேசமும் வெவ்வேறான சுதந்திர அரசுகளின் கீழ் இயங்குவதா அல்லது சமஷ்டி அமைப்பின் கீழ், தமிழருக்கு உரிய அதிகாரங்களைப் பங்கிடு செய்வதன் மூலம் ஒரு நாடாக இருப்பதா என்பதைத் தீர்மானிக்க வேண்டிய ஒரு காலகட்டத்தில் நாடும் தலைவர்களும் மக்களும் இருக்கிறார்கள்.

சிங்களவர்கள் — தமிழர்களிடையே உள்ள இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இருபக்கத் தலைவர்களும் யதார்த்தத்தைப் புரிந்து கொண்டவர்களாக — தீர்க்க தரிசனம் மிக்கவர்களாக — மக்கள் ஆதரவு பெற்றவர்களாக — நீதிக்காக விட்டுக் கொடுப்பவர்களாக மட்டும் இருந்தால் போதாது; தீர்வை நோக்கிய முயற்சிகளின் போது அல்லது தீர்வு காணப்பட்ட பின் அதை நடைமுறைப்படுத்தும் போது, அதனைச்செயற்படுத்தக் கூடிய— அரசியல் மற்றும் இராணுவ அதிகாரம் மிக்கவர்களாக— வெளிச்சூழ்நிலை, சந்தர்ப்பங்களுக்கு கைதிகளாகச் சிக்கியிருக்காதவர்களாக— தமது முடிவை தமது தரப்பு ஏற்றுக் கொள்ளச் செய்யக் கூடியவர்களாக இருக்க வேண்டும்.

இதுதான் கடந்த கால சரித்திரம் எமக்கு உணர்த்தியுள்ள பாடமாகும்.

எஸ். டபிள்யூ. ஆர். டி. முதல் தீர்வை விரும்பிய எந்தத் தலைவராலும் அதனை நடைமுறைப் படுத்த முடியாமல் போனதற்கு அல்லது நீதியான தீர்வு ஒன்றை நாடும் திசையை நோக்கி செயற்பட முடியாமல் போனமைக்கு இதுவும் ஒரு காரணமாகும்.

ஆனால் இன்றைய — முக்கியமான — காலகட்டத்தில் — ஈழத் தமிழர்களைப் பொறுத்த வரை—

அவர்களுக்கு நீதியான— அவர்களின் அபிலாஷைகளைத் தீர்த்து வைக்கக் கூடிய — ஒரு தீர்வு குறித்து அவர்களுக்காகப் பேசவும் முடிவு செய்யவும் கூடிய ஒரு தேசியத் தலைவர் இருக்கின்றார்; தேசியத் தலைமைத்துவம் இருக்கின்றது.

அரசியல் மற்றும் இராணுவ ரீதியில் முடிவு செய்யக் கூடிய அதிகாரமும் திறமையும் தேர்ச்சியும் மிக்கதாக அந்தத் தலைமைத்துவம் திகழ்கின்றது.

ஈழத் தமிழரின் அபிலாசைகளை வெளிப்படுத்தும் தலைமைத்துவம் அது என்பதையும்—

அந்தத் தலைமைத்துவத்தை ஏற்று, அதன் முடிவுகளுக்குக் கட்டுப்பட்டு செயற்பட ஈழத் தமிழர்கள் சித்தமாக இருக்கிறார்கள் என்பதையும் சர்வதேசமும் இன்று புரிந்து கொண்டுள்ளது.

ஆனால் சிங்களத் தரப்பை பொறுத்தவரை.........?

இருபது லட்சத்துக்கும் அதிகமான மேலதிக வாக்குகளால் ஜனாதிபதியாக — நிறைவேற்று ஜனாதிபதியாக— தெரிவு செய்யப்பட்ட சந்திரிகா சிங்கள நாட்டின் தலைவி. முப்படைகளின் தளபதியும் அவரே. முழு இராணுவ, அரசியல் அதிகாரமும் கொண்டவர் அவர்.

சமாதானத்தீர்வு ஒன்றைக் காண்பதில் முழு அவாவும் விருப்பமும் கொண்டவராகவும் தம்மை அவர் காட்டிக் கொள்கிறார்.

ஆனால் திறந்த மனத்தோடு — யதார்த்தத்தைப் புரிந்து கொண்டு — நீதியான தீர்வு ஒன்றை முன்வைக்கக் கூடியவராக அவர் இருக்கின்றாரா? தமது பதவியை அதிகாரத்தைத் — தக்க வைத்துக் கொள்ள வேண்டும் என்ற குறுகிய நோக்கத்துக்கு அப்பால் நின்று— ராணுவ, அரசியல் கட்டுப்பாடுகளை மீறி— சுயதீனமான தீர்வு ஒன்றை அவரால் முன்வைக்க முடியுமா? அத்தகைய தீர்வைக் கண்டாலும் அதனை சிங்கள மக்களும், சிங்கள இராணுவமும் ஏற்றுக் கொள்ளச் செய்யக் கூடிய திறமை, பலம் அவரிடம் இருக்கின்றதா?

இதுதான் இன்று எழுந்திருக்கும் முக்கியகேள்வியாகும்.

# பூநகரி விவகாரத்தில் காலத்தைக் கடத்தி நாசூக்காக பின்தள்ள முயலும் சந்திரிகா

சித்திரைப் புத்தாண்டு தினம் வந்து போய் விட்டது. சூரியன் மேட ராசிக்குள் புகும் ஆரம்ப நாளை இந்துக்களும், பௌத்தர்களும் — தமிழர்களும், சிங்களவர்களும் — புதுவருட தினமாகக் கொண்டாடுவது வழக்கம்.

தமிழர்களுக்கும், சிங்களவர்களுக்கும் பொதுவான புதுவருடத்தோடு அரசாங்கத்திடம் இருந்து வரும் அரசியல் செய்தி சாதகமாக இருக்குமா, பாதகமாக இருக்குமா என்ற கேள்வி தமிழர் மனங்களில் எழுந்திருந்தது.

புதுவருட தினத்துக்கு நான்கு நாட்களுக்கு முன்னரே, நீண்டகாலம் தடங்கற்பட்டுப் போயிருந்த நான்காம் கட்டச் சமாதானப் பேச்சுக்கள் யாழ்ப்பாணத்தில் நடைபெற்றன.

அந்தப் பேச்சு வார்த்தைகளில் ஆராயப்பட்ட விடயங்கள் குறித்து அரசாங்கத் தரப்பினர் எவ்வித முடிவும் எடுக்க முடியாதவர்களாக இருந்தமையும், அரசின் முடிவை அல்லது நிலைப்பாட்டை அறிவதில் தமிழர்களுக்கு மேலதிக ஆர்வத்தை மட்டுமன்றிப் பெரும் சந்தேகத்தையும் உண்டாக்கியது.

நான்காம் கட்டப் பேச்சுக்களின் விளைவுகளை — அவ்வேளை ஆராயப்பட்ட விடயங்களின் பெறுபேறுகளை — அரசாங்கத்தின் முடிவுகளை ஜனாதிபதி சந்திரிகா புதுவருடத்துக்கு முதல் நாளன்று வெளியிட்டார்! தலைவர் பிரபாகரனுக்கு எழுதிய கடிதத்தை பொதுசன தொடர்பு சாதனங்களுக்கு வெளியிட்டதால் அது ஓர் அறிவிப்பாக மாறியது என்று கொள்வதில் தவறில்லை.

### நழுவல் வழுவல் போக்கு

தமிழர்கள் ஆவலோடு எதிர்பார்த்த அரசின் முடிவு, பெரிதாக நம்பிக்கை ஊட்டுவதாக இருக்கவில்லை. சாதகம் குறைந்ததும், பாதகம் நிறைந்ததுமான கலப்பு முடிவாகவும், நழுவல் வழுவல் தன்மை கொண்டதாகவும் சந்திரிகாவின் கடிதம் அமைந்திருந்தது.

## நழுவல் வழுவல் போக்கை பிரதிபலிக்கும் பிந்திய கடிதம்

தமது கோரிக்கைகளை நிறைவேற்றவும், செயற்படுத்திக் காட்டவும், விடுதலைப் புலிகள் அரசாங்கத்துக்கு இரண்டு தடவைகள்கால அவகாசம் கொடுத்த நெருக்குதலுக்கும்—

இம்மாதம் 28 ஆம் திகதி பாரிஸில் நடைபெறவுள்ள இலங்கைக்கு உதவும்நாடுகளின் மாநாட்டிற்குச் செல்வதற்கு முன்னர், தமிழர் விடயத்தில் அரசாங்கம் ஆக்க பூர்வமாகச் செயற்படுகிறது என்ற கருத்தை உருவாக்க வேண்டும் (இன்னொரு விதமாக சொல்வதானால்அரசு—விடுதலைப்புலிகள் பேச்சு முறிவடைந்து போகும் ஆபத்து இல்லை என்று காட்ட வேண்டும்) என்ற தேவைக்கும்—

மத்தியில் அழுத்தப்பட்ட ஒரு சூழ்நிலையிலேயே சந்திரிகா இப்படிஒரு முடிவை எடுத்திருக்கிறார்!

தமிழர் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் எனக் கூறிக் கொண்டு, புலிகளுடன் பேசுவதற்கு அரசு ஆரம்பித்த கடந்த ஏழு மாதங்களிலும் சந்திரிகாவின் நடத்தை வெறும்வாய்ச்சொல்லும் வாக்குறுதியாகவுமே இருக்கிறது. செயலளவில் பெரிதாகஎதுவும் நடக்கவில்லை. தமிழர் கைக்குக்கிடைத்தவை மிகவும் அற்பமே.

### மந்த நிலையே தொடருகிறது

எனவே ஜனாதிபதியின் புதுவருட அறிவிப்பு தமிழர்களைப் பொறுத்த வரையில் முன்னேற்றம் எதுவும் நிகழ்ந்ததான நிலையை உருவாக்கவில்லை. தொடர்ந்தும் மந்தகரமான நிலையே நீடிக்கிறது!

சந்திரிகாவின் புதுவருட அறிவிப்பின் பிரகாரம்—

★ எட்டுப் பொருள்கள் தவிர்ந்த ஏனைய பாவனைப் பொருள்கள் மீதான தடை நீக்கப்பட்டிருக்கிறது.

★ தடை நீக்கப்பட்ட பொருள்களை எடுத்து வருவதற்கு சோதனை முகாம்களில் படையினர் குந்தகமாக இருக்கிறார்களாஎன்பதனைக் கண்காணிப்பதற்கு சிவிலியன் குழுக்கள் நியமிக்கப்படும்.

## இராணுவம் விதித்த நிபந்தனையை மீள விரும்பாததன் விளைவு இது

★ வடக்கு-கிழக்கு கடலில் மீன்பிடிப்பதற்கு இருந்த தடைகள் மேலும் தளர்த்தப் பட்டுள்ளன. (இரவு மீன் பிடிப்பதும் அதில் அடங்கும்)

இவை மூன்றுமட்டுமே அரசு தெரிவித்த திட்டவட்டமான முடிவுகள். ஆனால் இவற்றைத் தானும், விடுதலைப் புலிகளின் காலக்கெடு கரைவதற்கு முன், அரசு செயலில் காட்டுமா என்பதே கவனத்திற்கு எடுக்கப்பட வேண்டியதாகும். இன்னும் நான்கு நாள்களில் அரசு செய்து முடிக்குமா? நடைமுறையில் காட்டுமா என்பதனைப் பொறுத்தே பேச்சின் எதிர்காலம் உள்ளது.

### காலக்கெடுவும் தட்டிக் கழிப்பும்

சந்திரிகாவின் இந்த முடிவுகள் விடுதலைப் புலிகளின் காலக்கெடுவைச் செயலற்றதாக்கி விடும் நோக்குடன் எடுக்கப்பட்டவை என்று சில அவதானிகள் கருதுகிறார்கள். ஆனால் அது தவறாகும். முடிவுகளை எடுப்பதனை விட முடிவுகள் செயற்படுத்தப் படுகின்றனவா என்பதிலேயே விடுதலைப்புலிகள் கூடிய கவனமும், அக்கறையும் கொண்டுள்ளனர்.

எந்த விடயத்திலும் காலக்கெடு விதிக்கும் உரிமை விடுதலைப் புலிகளுக்கு இல்லை என்ற தமது நிலைப்பாட்டை வலியுறுத்தும் விதத்திலேயே சந்திரிகா இவ்வாறு முடிவுகளை வெளியிட்டிருக்கிறார் என்று கருதுவோரும் உளர். ஆனால் சந்திரிகாவின் வாதத்தைத் தலைவர் பிரபாகரன் ஏற்காமல், மறுதலித்துப் பதில் எழுதினார் என்பதனை ஞாபகத்தில் கொள்ள வேண்டும்.

பேச்சுவார்த்தைக்குச் செல்லும் இரண்டு சாராருமே கோரிக்கைகளை மட்டுமன்றி நிபந்தனைகளையும், காலக்கெடுக்களையும் விதிக்கும் உரிமை உள்ளவர்கள் என்பதனை எவரும் மறந்து விடலாகாது.

மேலும் பூநகரிப் பாதையை திறக்கும் விடயம், கிழக்கில் விடுதலைப் புலிகள் ஆயுதங்களுடன் நடமாட அனுமதிக்க வேண்டும் என்ற கோரிக்கை ஆகிய இரண்டையும் வெகு சாதுரியமாக காலம் கடத்த முனைந்திருக்கிறார் சந்திரிகா.

★ பூநகரி முகாமை 600 மீற்றர் பின்னே நகர்த்தியதுடன் சோதனை மற்றும் தடை எதுவுமின்றி பொது மக்கள் அப் பாதை ஊடாகச் செல்லலாம் என்று உறுதியளித்திருந்தோம். அதை நாம் நடைமுறைப்படுத்துவோம்—

★ மூன்று மாதங்களின் பின்னர். அல்லது அரசியல் பேச்சு நடைபெறும் போது— இதில் எது முந்தியதோ அவ்வேளையில்— பூநகரி முகாம் விவகாரத்தை மீளாய்வு செய்யலாம்— என்று ஜனாதிபதி சந்திரிகா தமது கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிறார்.

### பூநகரி விவகாரம் பின்தள்ளல்

இவற்றை கூர்ந்து நோக்கினால், பூநகரி விவகாரத்தை

அரசியல்

வெகு நாசூக்காக பின்தள்ளுவதற்குச் சந்திரிகா முயல்வது பட்டெனத் தெரிகிறது!

பூநகரி முகாம் இராணுவ முக்கியத்துவம் வாய்ந்தது என்பதனால், தமது இராணுவத்தினரின் விருப்பத்தை— ஆலோசனையை— மீறி அதனைத் தன்னால் அகற்ற முடியாது என்பதனை சந்திரிகா தமது கடிதத்தில் வரிகளுக்கிடையில் கூறியிருக்கிறார்.

உண்மையும் அதுவே.

பூநகரி முகாம் இராணுவ முக்கியத்துவம் வாய்ந்தது என்பதே அரச படைத்துறையினரின் நிலைப்பாடு அங்கிருந்து இராணுவ முகாமை அகற்றினால் யாழ்ப்பாணக் குடா நாட்டின் மீது போட்டுள்ள முற்றுகை தளர்ந்து போய்விடும். அது மட்டுமன்றி குடாநாட்டுக்கும் கிழக்குக்கும் இடையேயான விடுதலைப் புலிகளின் கடல் வழித் தொடர்பு மேலும் வலுத்து விடும். அதன் மூலம் விடுதலைப் புலிகள் கிழக்கிலும் தமது இராணுவ பலத்தைப் பெருக்கும் வாய்ப்பும் அதிகரிக்கும். ஆகையால் பூநரி இராணுவ முகாமை அகற்றக் கூடாது என்ற நிலைப்பாட்டிலிருந்து சிறிதேனும் விட்டுக்கொடுப்பதற்கு படையினர் தயாராகஇல்லை.

## பேச்சை தாம் முறிக்கவில்லை என்று காட்ட முயல்கிறார்

பூநகரி இராணுவ முகாமை அகற்றுவது என்று அரசாங்கம் முடிவு எடுக்கும் மானால்— விடுதலைப்புலிகளின் கோரிக்கைக்கு இணங்குமானால்— அதன் பிரகாரம் அந்த முகாமை அகற்றிய பின்னர் எந்தச்சந்தர்ப்பத்திலும் பூநகரியில் மீண்டும் ஓர் இராணுவ முகாமை நிறுவுமாறு, பூநரியைப் பிடிக்குமாறு கேட்கக் கூடாது—

முப்படைகளின் உயர்வட்டாரங்கள் இவ்வாறு சந்திரிகாவை எச்சரித்ததாகவும் அதனாலேயே பூநகரியை விட்டுக் கொடுப்பதற்குச் சந்திரிகா பின்னடிக்கிறார் என்றும் அறிய வந்துள்ளது.

அரசியல் பேச்சு தொடங்கிய பின்னர், அல்லது மூன்று மாதங்களின் பின்னர் இராணுவத்தினரை சந்திரிகாவால் வழிக்குக் கொண்டுவர முடியுமா? நிறைவேற்று அதிகார பலத்தைக் கொண்டு இப்போது செய்யமுடியாததை அரசியல் பேச்சுவார்த்தை தொடங்கிய பின்னர் எவ்வாறு செய்யப்போகிறார்?

மேலும் பூநகரி முகாமை சற்றுத் தூரம் நகர்த்துவதன் மூலம் பூநகரி—சங்குப்பிட்டி பாதையூடாக தமிழ் மக்கள் பயணம் செய்ய முடியும் என்று அரசு கூறுவது அர்த்தமற்றதாகும்.

### நம்ப வேண்டுமா?

மோதல் தவிர்ப்பு ஒப்பந்தம் அமுலில் இருப்பதையும் பொருட்படுத்தாது படையினர் பொதுமக்களின் பாதுகாப்புக்குக் குந்தகமாக நடந்து வருகின்றனர். மன்னார் கடற் பரப்பில் மீனவர்கள் மீது இராணுவத்தினர் தாக்குதல் நடத்தியுள்ளனர். மட்டக்களப்பில் அன்னை பூபதி நினைவாக நடத்தப்பட்ட ஊர்வலத்தை படையினர் கண்ணீர்ப் புகை அடித்துக் கலைத்துள்ளனர். இத்தகைய சம்பவங்களின் மத்தியிலும் தாம் பூநகரியினூடாகப் போக்குவரத்துச் செய்ய முடியும் என்று தமிழர்கள் நம்ப வேண்டுமா?

கிழக்கில் தமது போராளிகள் ஆயுதங்களுடன் நடமாட அனுமதிக்க வேண்டும் என்ற விடுதலைப் புலிகளின் கோரிக்கையையும் இல்லை என்று சொல்லாமல் வெகு தந்திரமாகப் பின்புறத்துக்குத் தள்ளி விடும் பாணியிலேயே சந்திரிகாவின் கடிதம் அமைந்திருக்கிறது.

மோதல் தவிர்ப்பு உடன்படிக்கையின் கீழ் இது விடயம் ஆராயப்பட வேண்டும் என்று ஜனாதிபதி குறிப்பிட்டிருக்கிறார்.

மோதல் தவிர்ப்பைக் கண்காணிப்பதில், அது அமுலுக்கு வந்து மூன்று மாதங்கள் கடந்தும் அரசு கவனம் செலுத்தவில்லை. கண்காணிப்புக் குழுக்களுக்குத் தலைமை வகிப்பதற்கென அழைக்கப்பட்ட வெளிநாட்டுப் பிரமுகர்கள், கண்காணிப்புத் தொடர்பாக சில நடைமுறை விதிகள் குறித்து இருதரப்பும் இணங்க வேண்டும்; அதற்காகப் பேச வேண்டும் என்று தெரிவித்து எழுபது நாள்கள் கடந்தும் அரசு எதுவுமே செய்யவில்லை, அது குறித்துச் சிந்தித்ததாகவும் இல்லை!

### காலம் கடத்தும் தந்திரம்

அப்படியிருக்க, விடுதலைப் புலிகள் கிழக்கில் ஆயுதங்களுடன் நடமாடுவது குறித்து உடனடியாகப் பேசி அரசு ஒரு முடிவை எடுக்கும் என்று எப்படி எதிர்பார்ப்பது?

மொத்தத்தில் விடுதலைப் புலிகளின் நான்கு கோரிக்கைகளில் இரண்டு குறித்து வெறும் அறிவிப்புகளும் — வாக்குறுதிகளும் — கொடுத்து விட்டு—

மற்ற இரண்டு கோரிக்கைகளையும் மெதுவாக பின்னுக்குத் தள்ளும் விதத்தில், காலம் கடத்தும் உத்தியுடன் சந்திரிகா செயற்பட்டிருக்கிறார்.

இந்த நழுவல் வழுவல் நிலைப்பாட்டை பேச்சு வார்த்தையில் ஏற்பட்ட முன்னேற்றமாகக் கருதுவது பெரும் முட்டாள்தனமாகும். இது முழுக்க முழுக்க சந்திரிகா தனது காரியத்தைச் சாதிக்க, பேச்சுக்கள் முறியவில்லை அல்லது தான் முறிக்கவில்லை என்று வெளியே காட்டுவதற்கு எடுக்கும் தந்திரமான ஏற்பாடேயாகும்.

### அவசரம் எங்கே போயிற்று

இன்னும் ஒரு விடயம். பேச்சுவார்த்தை மேசையில் அரசியல் விவகாரத்தை பேசுவதற்கும், தனது உத்தேச தீர்வுத் திட்டத்தை முன்வைப்பதற்கும் மிக அவசரப்பட்ட சந்திரிகா—

ஐந்தாம் கட்டப் பேச்சுக்களுக்கு காலம் தாழ்த்தியே திகதி நிர்ணயித்துள்ளார். அது மட்டுமன்றி நடக்கவிருக்கும் ஐந்தாம் கட்டப் பேச்சிலும் அரசியல் விவகாரம் ஆராயப்பட மாட்டாது என்பதனை மறைமுகமாகத் தெரிவித்துவிட்டார்.

அரசமைப்பு மாற்றத்துக்கு நிர்ணயிக்கப்பட்ட ஜூலை 15ஆம் திகதிக்கு முன்னர் இனப் பிரச்சினைக்கான அரசியல் தீர்வைக் காண்பது கஷ்டம் என்பதனை சந்திரிகா உணர்ந்து விட்டார் போலும்!

அப்படியானால் தமிழர் பிரச்சினைக்கான தீர்வு எதுவும் இல்லாத, நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழிப்பது, தேர்தல் முறையை மாற்றுவது ஆகிய அம்சங்களை மட்டுமே உள்ளடக்கியதாகவே அரசமைப்பு மாற்றம் நடக்கப் போகிறதா?

வழமைப் பிரகாரம், இனப் பிரச்சினைக்குரிய தீர்வு வெறும் ஒப்பந்தமாகவும், சட்ட விதிகளாகவுமே இருக்க வேண்டும் என்று சந்திரிகா முடிவு செய்துவிட்டாரா? ★

- உதயகாந்தன் -

சூரியகாந்தி
உதயன் ஞாயிறு சிறப்பம்சம்

# சாவை வென்ற சத்தியன்

உயிர்ப்பும் உயிரும் நானே என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான் என்ற வார்த்தை வடிவம் செயலுருப் பெறும் இறை வார்த்தைக்கு கிறிஸ்து அர்த்தம் கொடுத்து வாழ்ந்ததால் இன்று அகமகிழ்கிறோம், ஆனந்தமடைகிறோம்.

இழப்புகள், இறப்புகள் மலிந்த பூமியில் மக்களின் மனம் சஞ்சலப்படும் வேளையில், எல்லோர் மனங்களிலும் மனித பெலவீனத்தால் எங்கெங்கோ, யார்யாரிடமோ,எதிர்பார்த்த அமைதி, சமாதானம், சகோதரத்துவம் யாவும் நம்பிக்கையிழந்து, நாதியற்று விளங்கும்போது எல்லோர் மனங்களும் இறைவனின் சந்நிதியில் தம்மை மறந்து தம் குறைகளை உணர்ந்து மனமுருகி வேண்டிடும் சாட்சிகளாகிவிட்ட இந்நாட்களில் நம்பிக்கை வார்த்தையும், அதன்படி வாழ்க்கையும் வாழ்ந்து சிலுவைச் சாவையே ஏற்றுக்

### உயிர்த்தஞாயிறு இன்றாகும்

கொண்ட இறைமகன் கிறிஸ்து சாவுக்கு சவால் விடுத்து ''[illegible]'' என்ற வார்த்தைக்கு வடிவமிட்டதால் உயிர்ப்பு ஞாயிறு எனும் உன்னத நாளை இன்று நாம் கொண்டாடி மகிழ்கிறோம்.

பிறப்பதும் இறப்பதும் மானிடத்தின் நியதியான போது மனுமகன் கிறிஸ்து தனது வாழ்வில் மக்களின் பாவச்சுமைகளை ஏற்று தன்னையே பலியாக்கி சிலுவையில் சாவை வென்றதால் இன்று சரித்திர நாயகனாக சாவையே வென்ற சத்தியனாக மக்களின் மனங்களை நம்பிக்கையூட்டும் வார்த்தைக்கு வடிவம் கொடுத்து வாழ்ந்ததால் இந்நாள் உயிர்ப்பு ஞாயிறு இருநாளாக [illegible] ''பிதாவே இவர்கள் அறியாமல் செய்கிறார்கள் இவர்களை மன்னியும்.'' என்று எதிரியையும் மன்னிக்க இரந்து கேட்கும் குரல் ஒலியில்தான் எத்தனை தாழ்ச்சிகள் ''பசியாய் இருந்தேன், தாகமாய் இருந்தேன், ஆடையின்றி இருந்தேன், சிறைப்பட்டிருந்தேன், இவர்களுள் ஒருவருக்கு நீங்கள் செய்த போதெல்லாம் எனக்கே செய்தீர்கள்'' என இறைவனைத்தேடும் இதயங்களுக்கு அயலவரிடத்தில் அன்பு காட்டுங்கள் என்றவாறே வழிகாட்டி வார்த்தைக்கு உயிர் கொடுத்ததால் மூன்றாம் நாளில்உயிர்பெற்று மனுக்குலத்தை மீட்டு உயிர்த்த யேசுவாக வெற்றி நாயகன் கூறிய ''உங்களுக்குச் சமாதானம்'' எனும் நம்பிக்கையூட்டும் வார்த்தைகள் தான் எம் உள்ளங்களுக்கு உயிர்ப்பு ஞாயிறு தரும் நற்செய்தியாகிறது.

ஜோசப் பாலா

### கடந்த ஜனவரியில் மட்டும்

# 41 ஆயிரம் கோழிகளுக்கு கொள்ளை நோய் தடுப்பூசி

யாழ்ப்பாணம், ஏப். 16

கால்நடை அபிவிருத்தியை மேற்கொள்ளும் பொருட்டு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனமும், கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களமும் இணைந்து கால்நடைகளுக்கு தடுப்பூசி போடும் நடவடிக்கையினை மேற்கொண்டு வருகின்றது.

அந்த வகையில் யாழ்மாவட்டத்தில் கடந்த ஜனவரி மாதம் 41 ஆயிரத்து 550 கோழிகளுக்கு கொள்ளை நோய்க்கு எதிரான ரனிக்கட் தடுப்பூசியும், 2331 மாடுகளுக்கு தொண்டை நோய்க்கு எதிரான தடுப்பூசியும் போடப் பட்டுள்ளன.

மேலும் ஒவ்வொரு கால்நடை வைத்தியர் பிரிவுகள் தோறும் மாதாந்தம் இலவசமாக தடுப்பூசி போடப்பட்டு வருவதானால் கால்நடை வளர்ப்போர் தங்கள் கால்நடைகளுக்கு தடுப்பூசி ஏற்றி நோயிலிருந்துகாப்பாற்றுமாறு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் கேட்டுக் கொள்கின்றது.

### பாடசாலையை விட்டு வெளியேறும்

# மாணவருக்கு தொழில் பயிற்சி திட்டங்கள்

கொழும்பு, ஏப். 16

பாடசாலைகளிலிருந்து வெளியேறுவோருக்கானபுதிய தொழிற் பயிற்சித்திட்டங்கள் ஆரம்பிக்கப் படவுள்ளன.

தேசிய ஆளணி கைத்தொழில் பயிற்சி அதிகார சபை இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகின்றது.

இதற்கென மாகாணசபை நிர்வாக வேலைகள் பரவலாக்கப்பட்டுள்ளன வடக்குகிழக்கு நிர்வாகம் தலைமை அலுவலகத்தினால் மேற்கொள்ளப் படும்.

பயிற்சி அளிப்பதற்காக மாகாண அலுவலகம் ஒன்று அடுத்தமாதம் தேசிய அதிகாரசபையினால் நிறுவப்படும்

வடபகுதிக்கென வவுனியாவிலும் ஓர் அலுவலகத்தை நிறுவுவது தொடர்பாக ஆராயப்பட்டு வருவதாக சபையின் தலைவர் ஆர். ஐ. அமரசிங்க தெரிவித்துள்ளார். (ஒ-14)

## சிவாச்சாரிய பீடாதிபதியாக தெரிவு

யாழ்ப்பாணம், ஏப் 16

திருகோணமலை சகேண பீடமாகிய ஆலடி விநாயகர் ஆலய ஆதீன கர்த்தாவும் பிரதம குருக்களுமாகிய சிவஸ்ரீ சு. முத்துக்குமாரசாமிக் குருக்கள் சைவக் குருமார்களின் சிவாச்சாரிய பீடாதிபதியாக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

அவரது பீடாரோகண விழா திருகோணமலையிலும், யாழ்ப்பாணத்திலும் நடைபெறவுள்ளது. (ஒ-14)

## அன்பளிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 16

யாழ். மாநகர சபைப் பிரிவுக்கு உட்பட்ட சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைகள், குடும்ப நல சேவைப் பகுதிக்கு கர்ப்பிணிப் பெண்களை நிறுப்பதற்கான, நிறுத்தலளவைக் கருவிகளை யாழ். லயன்ஸ் கழகத்தினர் அன்பளிப்பாக வழங்கியுள்ளனர்.

சுமார் 30 ஆயிரத்து 600 ரூபா பெறுமதியான 17 கருவிகள் பிரிவுக்கு ஒன்றாக அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளதாக யாழ். லயன்ஸ் கழக பிரசாரப் பிரிவுத் தலைவர் லயன் சி. ஸ்ரீகணேசன் தெரிவித்தார். (ஒ-15)

## உண்மைகள் உயிர்த்தே தீரும்!

மண்மகள் வருந்தப் பாரச்
சிலுவையைச் சுமந்தயேசு
பெண்மகள் பொருந்த மூன்று
முறை விழுந்திட்டபோதும்
கண்ணியம் அற்றோர், அந்தக்
கழுமரத்து அறைந்தே கொன்றார்
கண்ணியன் உடலைப் பின் ஓர்
கல்லறை தனிலும் இட்டார்!
சத்தியன் செத்தான் என்றே
சண்டியர் நினைத்தார்! அங்கே
கத்தி பொல்லுடனே நின்று
காவலும் காத்தார்! ஆனால்
முத்தியைத் திறக்கவந்த
முனைவனும் மூன்றாம் நாளில்
பொத்திய கதவை நீக்கிப்
பொழுது என எழுந்தான் அன்றே!
வெண்மயச் சோதி சூழ்ந்து
விலகிடக் கல்லும் சாய
அண்ணலும் எழுந்திட்டானே
ஆதவன் போல! தம்பி,
'உண்மைகள் உயிர்த்தே தீரும்'
கொஞ்சம் நாம் பொறுக்கவேண்டும்
அண்ணலின் உயிர்ப்புக்கூறும்
அடிக் கருத்து இதுதான் தம்பி

— சத்தியசீலன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## திருமதி செல்லத்துரை சுந்தரம்மா
(மலாயன் பென்சனியர்)

காரைநகர் சிவன் கோவிலடியை வசிப்பிடமாகவும், நவாலி வடக்கு மானிப்பாயை தற்போதைய இருப்பிடமாகவும் கொண்ட காலம்சென்ற செல்லத்துரையின் அன்பு மனைவி செல்லத்துரை சுந்தரம்மா 14-4-95 வெள்ளிக்கிழமை காலமானார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் 14-4-95 அன்று நடைபெற்றன. இத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சுரேஸ்குமாரன்
(பேரன்)

(36249)

## ச. நர்கேந்திர ஐயர் (கண்ணன் ஐயர்)

தாவடி ஸ்ரீ வட பத்திரகாளி அம்பாள் தேவஸ்தான ஆதீன கர்த்தாவும், பிரதம குருவும் ஆகிய திரு. ச. நாகேந்திர ஐயர் (கண்ணன் ஐயர்) 15-04-95 காலை 9மணியளவில் சிவபதம் எய்தினார்.

இவர் திலகேஸ்வரியின் அன்புக் கணவரும், சண்முகப்பிரியன் (நோர்வே), சாந்தினி, நந்தினி, சசிதரன், சாந்தரூபி ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

ஈமைக்கிரியைகள் இன்று 16-04-95 காலை 10 மணியளவில் தாவடி தெற்குக் கொக்குவிலில் அமைந்துள்ள அன்னாரின் வீட்டில் நடைபெற்று பூதவுடல் தாவடி மயானத்தில் தகனம் செய்யப்படும் இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், பொதுமக்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் தருபவர்:
ரவி (மகன்)

தாவடி, தெற்கு,
கொக்குவில்.

(36251)

## சிவஞானபிள்ளை கனகலிங்கம்

சரவணை மேற்கை பிறப்பிடமாகவும் புங்குடுதீவு 3ம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும் கொண்டு. தற்போது கனடாவில் வசித்து வந்தவரான சிவஞானபிள்ளை கனகலிங்கம் 08-04-95 அன்று கனடாவில் அகால மரணமானார்.

இவர் காலஞ்சென்றவர்களான சிவஞானபிள்ளை நாகம்மா தம்பதிகளின் புதல்வரும் பராசக்தியின் (கனடா), அன்புக் கணவரும், மதிவதனி(கனடா), கலாவதனி (கனடா), விமலதாசன் (சுவிஸ்), நிர்மலதாசன் (கனடா), முகுந்தன் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் பாக்கியலிங்கத்தின் மாமனாரும் காலஞ்சென்றவர்களான பரமலிங்கம் முத்துபிள்ளை தம்பதிகளின் மருமகனும், நடேசபிள்ளை, லோகேஸ்வரி (மலேசியா) ஆகியோரது அன்புச் சகோதரனும் மயில்வாகனம், நாகம்மா, சற்குணம், சுப்பிரமணியம், பரிமளம் ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரது ஈமக்கிரியைகள் கனடாவில் நடைபெற்றன.

தகவல்
சி. நடேசபிள்ளை
(சகோதரன்)

321 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்

(36254)

## வைரமுத்து மயில்வாகனம
[புத்தூர் கிழக்கு வீரவாணி]

அன்னார் காலஞ்சென்ற வைரமுத்து - நாகம்மா தம்பதியினரின் கனிஷ்ட புதல்வரும், திருமதி அன்னரத்தினத்தின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற கனகசுந்தரம், மற்றும் குகசிங்கம் (பொறியியலாளர் லண்டன்), திருமதி க. செல்வநாயகம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் தகனக்கிரியைகள் இன்று (16 04 95) ஞாயிறு நண்பகல் 1 மணிக்கு குடும்ப மயானத்தில் நடைபெறும்.

தகவல்:
ச. கந்தசாமி

(36258)

## கணபதிபபிளளை வேலுப்பிள்ளை

புங்குடுதீவு 4ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், தற்போது சின்னக்கடை வீதியில் வசித்தவருமான வேலுப்பிள்ளை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை நாகம்மாவின் அன்பு மகனும், சிவஞானம் (பெரியகடை பிரபல வர்த்தகர்), சற்குணம், அபிமன்யு, லட்சுமி, புலேந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், அருள்பாக்கியம், நாகேசு (சின்னக்கடை வர்த்தகர்), தவமணிதேவி, கோபாலபிள்ளை, காலஞ்சென்ற நாகேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரது பூதவுடல் இறுதிக்கிரியைக்காக இன்று (16-04-95 பி. ப. 3 மணியளவில் இல 61, 4ம் குறுக்குத்தெருவில் உள்ள அவரது இல்லத்தில் இருந்து கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ஏ நாகேசு

(36257)

## சின்னததுரை இராஜேநதிரன்

சின்னத்துரை இராஜேந்திரன் (Mechanical Cum Computer Engineer, U K.) இங்கிலாந்தில் 11-4-95 அன்று காலமாகிவிட்டார்.

இவர் நீராவியடியைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான மலேயன் பென்சனியர் சின்னத்துரை - இராசம்மா தம்பதிகளின் பாசமிகு கனிஷ்ட புத்திரனும், திரு. திருமதி ஆறுமுகத்தின் அன்பு மருமகனும், சறோஜினியின் அன்புக் கணவரும், நளினி, ரஞ்சன், ரதி ஆகியோரின் பாசமிகு தந்தையும், Dr. பாலசுப்பிரமணியம் (Manchester - U K ). திருமதிகள் இராசலட்சுமி கனகரத்தினம், மகேஸ்வரி நவரத்தினம், கமலேஸ்வரி அரியநாயகம் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இராசலட்சுமி கனகரத்தினம்,
கமலேஸ்வரி அரியநாயகம்.
[சகோதரிகள்]
198 (484), கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்

41 Alexandra Road,
Hounslow,
Middlesex,
U.K

(36238)

# மேலும் சில பாடசாலைகளின் ஜி. சி. ஈ. பரீட்சை முடிவுகள்

யாழ்ப்பாணம், ஏப். 16

ஜி. சி. ஈ. சாதாரண தரப் பரீட்சையின் மேலும் சில பாடசாலைகளின் பெறுபேறுகள் வருமாறு:

**ஹாட்லிக் கல்லூரி**
8டி — ஒருவர் (கி. சுரேந்திரன்) 7டி — 5 பேர், 6டி — 8 பேர், 5டி — 15 பேர்.

**வட இந்து மகளிர்**
8டி — ஒருவர் (த. ஜெயந்தினி) 6டி 2சி ஒருவர், 4டி மூவர்.

**பரு. மெதடிஸ்த பெண்கள்**
7டி — ஒருவர், 6டி — 4 பேர், 5டி — 6 பேர், 4டி — 11 பேர்.

**பரு. வேலாயுதம் ம. வி.**
4டி — ஒருவர்.

**பரு. சித்தி விநாயகர்**
2டி 2சி 3எஸ் — ஒருவர், 1டி 2சி 5எஸ் — ஒருவர்.

**புற்றளை ம. வி.**
7டி 1சி — ஒருவர்.

**வல்வை மகளிர்**
5டி 3சி — ஒருவர், 4டி 2சி 1எஸ் — ஒருவர், 3டி 4சி 1எஸ் — இருவர், 3டி 2சி 2எஸ் — ஒருவர்.

**வல்வை சிதம்பரா**
2டி — ஒருவர்.

**வல்வை சிவகுரு**
6டி 1சி 1எஸ் — ஒருவர்.

**தொண்டமானாறு வீரகத்திப்பிள்ளை ம. வி.**
2டி — ஒருவர்.

**கரவெட்டி வட. மத்திய மகளிர்**
8டி — ஒருவர் (வே. ஸ்ரீ ரேணுகா), 5டி 3சி — ஒருவர், 4டி 4சி — இருவர், 3டி 4சி — ஒருவர்.

**கரவெட்டி விக்கினேஸ்வரா**
5டி 3சி — ஒருவர் 4டி 2சி 1எஸ் — ஒருவர் 3டி 2சி 3எஸ் — ஒருவர் 3டி 4சி — ஒருவர்

**நெல்லியடி ம. ம. வி.**
7டி 1சி — ஒருவர் 3டி 4சி — இருவர் 2டி 5சி — 7 பேர்.

**உடுப்பிட்டி அமெரிக்க மிஷன்**
7டி — ஒருவர் 4டி 1சி 3எஸ் — ஒருவர் 3டி 4சி 1எஸ் — மூவர்.

**உடுப்பிட்டி மகளிர்**
7டி 1சி — ஒருவர், 6டி 2சி — ஒருவர், 4டி 4சி — ஒருவர்.

**கட்டை வேலி ஞானாசாரியார்**
6டி 2சி — ஒருவர், 5டி 3சி — ஒருவர்.

**திரு இருதய கல்லூரி**
3டி 3சி 1எஸ் — ஒருவர்.

**தேவரையாளி இந்து**
2டி 5சி 1எஸ் ஒருவர், 2டி 3சி 1எஸ் — ஒருவர்.

**உடுத்துறை ம வி.**
3டி 3சி 2எஸ் — ஒருவர், 2டி 4சி 1எஸ் — ஒருவர், 1டி 3சி 4எஸ் — ஒருவர்

**மருதங்கேணி இ.த.க**
2டி 1சி 3எஸ் — ஒருவர், 1டி 2சி 3எஸ் — 5பேர்.

**வெற்றிலைக் கேணி பரமேஸ்வரா**
2டி 5சி — ஒருவர், 1டி 3சி 3எஸ் — ஒருவர், 1டி 3சி 2எஸ் — ஒருவர்.

**ஆழியவளை சி சி த.க.**
2டி 3சி 2எஸ் — ஒருவர், 2டி 3சி 1எஸ் — இருவர், 1டி 3சி 3எஸ் — மூவர்.

**செம்பியன் பற்று அ த க.**
4டி 3சி 1எஸ் — ஒருவர், 1டி 3சி 3எஸ் — ஒருவர், 1டி 3சி 2எஸ் — மூவர்

**நாகர் கோயில் ம வி**
1டி 4சி 3எஸ் — ஒருவர், 1டி 3சி 2எஸ் — ஒருவர்.

**அம்பன் அ மி.த.க**
1டி 3சி 4எஸ் — மூவர், 4சி 4எஸ் — ஒருவர்.

**வட்டு. யாழ்ப்பாணக் கல்லூரி**
8டி — ஒருவர் (சுதர்சனா மகேந்திரன்) 7டி 1சி — ஒருவர், 7டி — ஒருவர், 6டி 2சி — நால்வர், 6டி 1சி 1எஸ் — ஒருவர், 5டி — மூவர்.

**சுழிபுரம விக்ரோறியா**
6டி 2சி — ஒருவர், 3டி 5சி — மூவர், 3டி 3சி 2எஸ் — ஒருவர்.

**அராலி சரஸ்வதி**
3டி 5சி — ஒருவர், 3டி 4சி 1எஸ் — ஒருவர், 3டி 3சி 2எஸ் ஒருவர்.

**வட்டு. இந்துக் கல்லூரி**
6டி 2சி — 2 பேர், 5டி 3சி — ஒருவர்.

**யாழ்ரன் கல்லூரி**
3டி 3சி 2எஸ் — ஒருவர், 2டி 4சி 2எஸ் — இருவர், 2டி 3சி 2எஸ் — நால்வர்.

**கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி**
5டி 2சி 1எஸ் — ஒருவர், 3டி 4சி 1எஸ் — இருவர், 2டி 4சி 2எஸ் — ஐவர்.

**இளவாலை மெய்கண்டான்**
5டி 3சி — ஒருவர், 4டி 3சி 1எஸ — ஒருவர், 3டி 3சி 2எஸ் — ஒருவர்.

**வட்டு. திருஞானசம்பந்தா**
5டி 2சி 1எஸ் — ஒருவர், 3டி 5சி — ஒருவர்.

**பண்ணாகம் மெய்கண்டான்**
4டி 4சி — ஒருவர், 3டி 4சி 1எஸ் — ஒருவர்.

**வடக்கு அராலி இந்து**
2டி 3சி 3எஸ் — ஒருவர், 2டி 2சி 3எஸ் — ஒருவர், 1டி 5சி 2எஸ் ஒருவர்

**திருநெல்வேலி முத்துத்தம்பி**
2டி 2சி 3எஸ் — ஒருவர், 1டி 2சி 4எஸ் — ஒருவர், 3சி 4எஸ் — ஒருவர்.

**சென். சாள்ஸ்**
2டி 5சி — இருவர். 6சி 2எஸ் — இருவர் 5சி 3எஸ் — ஒருவர்.

**நீர்வேலி — அத்தியார் இந்து**
6டி 2சி — ஒருவர், 5டி 3சி — ஒருவர், 4டி 3சி — ஒருவர்.

**இளவாலை புனித ஹென்றியரசர்**
7டி 1சி — ஒருவர், 4டி 4சி — இருவர், 4டி 3சி 1எஸ் — ஒருவர்.

**புங்குடுதீவு ஸ்ரீ கணேசா**
5டி 2சி 1எஸ் — ஒருவர், 3டி 5சி — ஒருவர், 3டி 4சி 1எஸ் — ஒருவர்.

## நூல் வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், ஏப்ரல். 16

ஆதிகோவிலடி ஜெயம் எழுதிய "ஆழக் கடல் வென்றவர்கள்" என்னும் நூல் வெளியீட்டு விழா இன்று ஞாயிறு பிற்பகல் 4 மணிக்கு வலவெட்டித்துறை அமெரிக்கன்மிசன் தமிழ் கலவன் பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

திரு. ச.காந்திதாசன் தலைமையில் இடம்பெறும் அந்த விழாவில் தமிழீழ கல்விக் கழகப் பொறுப்பாளர் திரு. வெ. இளங்குமரன் சிறப்புரை ஆற்றுவார்.

வல்வை ந. அனந்தராஜ் நூலை வெளியிட்டுவைத்து வெளியீட்டுரைநிகழ்த்துவார்.

வல்வையில் இருந்து அமெரிக்காவரை சென்ற "அன்னபூரணி" கப்பலின் வல்வை மாலுமிகளில் அண்மைக் காலம் வரை உயிருடன் இருந்த கடைசி மாலுமியான அமரர் இரத்தினசாமியின் பேட்டியும் மற்றும் பலஅம்சங்களும் இந்த நூலில் இடம் பெற்றுள்ளன.

## அன்னை--
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கிளிநொச்சி, முல்லைத் தீவு வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களிலும் அன்றைய தினம் பரிசளிப்பு விழா நடைபெற ஏற்பாடாகி உள்ளது.

மேற்படி தேர்வின் தேசிய மட்டத்தில் ஒவ்வொரு பிரிவிலும் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களுக்கு முறையே தங்கம், வெள்ளி வெண்கலப் பதக்கங்கள் வழங்கப்படவுள்ளன.

கோட்ட மட்டத்தில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களுக்கு பரிசில்களும் சிறப்புச் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

கிளிநொச்சி மாவட்டத்தினுள் அடங்கும் பளை கல்வி கோட்ட மாணவர்களுக்கான பரிசளிப்பு உரும்பராயில் நடைபெறும் விழாவிலேயே வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது

அன்னை பூபதி நினைவாக வருடாந்தம் நடத்தப்படும் இந்த பொது அறிவுத் தேர்வில் இம்முறை ஐந்து லட்சத்துக்கு மேற்பட்ட மாணவர்கள் தோற்றியிருந்தனர்.

தேசிய மட்டத்திலும் கோட்ட மட்டத்திலும் பரிசு பெறும் மாணவர்களின் விவரம் பின்னர் வெளியாகும். [ஐ]

## நோயாளர் கப்பல் சேவை மாற்றம்

யாழ்ப்பாணம். ஏப் 16

எதிர்வரும் 19 ஆம் திகதி புதன் கிழமை நடைபெறவிருந்த நோயாளர்களுக்கான கப்பல் சேவை மறுநாள் 20 ஆம் திகதிக்கு மாற்றப்பட்டுள்ளது.

எனவே 19 ஆம் திகதி கப்பலில் கொழும்பு செல்ல இருந்த நோயாளர்களையும், உடன்செல்பவர்களையும் மறுநாள் 20 ஆம் திகதி காலை 6 30 மணிக்கு உணவு. தண்ணீர் என்பனவற்றுடன் பயணத்துக்கு ஆயத்தமாக வருமாறு யாழ் போதனா ஆஸ்பத்திரி பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஐ)


# எடிசன் அக்கடமி

(யாழ். இந்து அருகில்)
411/1, கே. கே. எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

(கொக்குவில் இந்து அருகில்)
27, கே. கே. எஸ். வீதி,
கொக்குவில்.

## O/L DAY CLASS

| | | | |
|---|---|---|---|
| கணிதம் | — B P பாஸ்கரன் | கணிதம் | — B. P. பாஸ்கரன் |
| விஞ்ஞானம் | — J J கொலின்ஸ் / செல்வா | விஞ்ஞானம் | — J. J. கொலின்ஸ் / செல்வா |
| ச. கல்வி | — K S முத்துலிங்கம் | ச கல்வி | — ச கோபி |
| தமிழ் | — A ஆர்த்திகன் | தமிழ் | — S மணிமாறன் |
| ஆங்கிலம் | — J C J. பனுவேற்பிள்ளை | ஆங்கிலம் | — C. சத்தியமூர்த்தி |
| வர்த்தகம் | — A. விக்கி | வர்த்தகம் | — T அரவிந்தன் |
| சித்திரம் | — S P சோதி | சித்திரம் | — S P சோதி |

★ கணிதம் மேலதிக வகுப்பு மூலம் அடிப்படையில் இருந்து போதிக்கப்படும்.
★ கணிதம் - விஞ்ஞானம் வாரத்தில் 6 மணித்தியாலத்திற்குக் குறையாத வகுப்பு
★ ஆண்டு 9, 10, 11 பாடத்திட்டத்துடன் மீட்டலும் இடம்பெறும்.

ஆரம்பம்: 20-04-1995
வியாழன் முற்பகல் 8-30 மணி

[சி-1015]


## மே நாளை சிறப்பாக....
[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

றுக் கட்டத்திற்கேற்ப சித்தரிப்புக்களைக் கொண்டுள்ள சிறந்த ஊர்திகளுக்கு பரிசுகள் வழங்கப்படவுள்ளன. இதற்கான போட்டிகளும் உச்சமாகவே இருக்கும்.

1. தேசிய விடுதலைப் போராட்ட வரலாறும், மனதைத் தொடும் சம்பவங்களும்:
2. பேரினவாதம் தோற்றுவித்த பொருளாதாரத் தடைகள் மத்தியிலும், உழைக்கும் மக்கள் முனைப்பாகச் செயற்படுவதால், சுயசார்புப் பொருளாதார மேம்பாடு.
3. பேரினவாதத்தின் இன்றைய பல்வேறு முகங்கள்.
4. ஸ்ரீலங்கா அரசின் தமிழீழ மக்களை ஏமாற்றி திசை திருப்பும் திட்டங்கள்.
5 மக்கள் அனைவரும் கூட்டாகச் செயற்பட்டு,பலன் பெறல்.
6. பெண் விடுதலை.
7. சரண்டலற்ற, அறிவியல் சார்ந்த சமுதாயத்தை உருவாக்க மக்களது பங்களிப்பு.
8. எம்மீதான அனைத்துலகப் பார்வை.

மேற்கூறியவற்றை தக்கபமாக சித்திரிக்கும் ஊர்திகளே பரிசுகளுக்காகத் தெரிவு செய்யப்படும்.

நாளை திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ். மாவட்ட அரசியல்துறைப் பணிமனையில் [கோண்டாவில்] நடைபெறவுள்ள மே நாள் குறித்த விசேட கலந்துரையாடலில் வெகுஜன அமைப்புக்கள் அரச கூட்டுத்தாபன. கூட்டுறவு, தனியார் துறை ஊழியர் சங்கங்கள், கூட்டுறவுத்துறை இயக்குநர் சபை உறுப்பினர்கள், கிராமிய அமைப்புக்கள், மாதர் அமைப்புக்கள், மற்றும் சனசமூக நிலைய, விளையாட்டுக் கழக நிர்வாகிகள், கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள், சமாஜங்கள் ஒன்றிய நிர்வாகிகளை கலந்து கொள்ளுமாறு கேட்கிறோம். [ஜ]

## "சார்க்"
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பான அனுதாபத்துக்கு இடமில்லாமல் செய்துவிட்டது.

இவ்வாறு அந்தக் கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

"சார்க்" நாடுகளின் தலைவர்களின் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக அடுத்த மாதம் இந்தியா செல்லவுள்ள ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சுக்கள் குறித்து இந்தியத் தலைவர்களுக்கு விளக்கிக் கூறுவார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உத்தியோக பூர்வமற்ற முறையில் இடம் பெறும் அந்தப் பேச்சுக்களின் போது "சார்க்" நாடுகளின் அமைதிப் படை விவகாரமும் எடுத்துக் கொள்ளப்படலாம் என்று அரசியல் விமர்சகர்கள் சிலர் கருத்து வெளியிட்டுள்ளனர். (ஐ)

## ஜப்பானில்---
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கப்பட்டிருந்தன.

"அவும் ஷின்ரி கியோ" மத அமைப்பினர் கடந்த மாதம் சுரங்க ரயில் ஒன்றில் நடத்தியதாகக் கூறப்படும் "ஸரின்" விஷ வாயுத் தாக்குதலில் 11 பயணிகள் உயிரிழந்தனர். பல்லாயிரக் கணக்கானோர் பாதிக்கப்பட்டனர் என்பது தெரிந்ததே. [ஐ]

## சந்திரிகா...
(1 ஆம்பக்கத் தொடர்ச்சி)

வாக்குறுதி அளித்துள்ளது.—

இவற்றைக் கருத்தில் கொண்டு ஸ்ரீலங்காவுக்கு இவ்வருடம் கூடுதல் சலுகைக் கடன் வழங்குவது குறித்து இப்போது அரசுடன் பேச்சுக்கள் நடக்கின்றன— என்றும் திரு சயிரஸ் சகான் பொர் தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியம் கூடுதல் கடன் உதவி வழங்குவது ஏனைய சர்வதேச நிதி நிறுவனங்கள் அதிக கடன் வழங்குவதற்கு ஊக்கியாக அமையும் என்றும் அவர் சொன்னார்.

ஸ்ரீலங்கா அரசாங்கம் வடக்கு - கிழக்கில் போர் நடத்துவதற்கு அதிக பணம் செலவிடுவதை கருத்தில் கொள்ளாது அதற்கு மேன் மேலும் கடன் வழங்கும் செயல் போரின் பாதிப்புக்களைப் பொருட்படுத்தாமையை எடுத்துக் காட்டுவதாக அவதானிகள் தெரிவித்தனர். (அ)

## பான்ட் குழுவினருக்கு

யாழ்ப்பாணம், ஏப் 16

யாழ். கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய "பான்ட்" வாத்திய இசைக் குழுவினர் அனைவரையும் நாளை திங்கள் முற்பகல் 10 மணிக்கு கல்லூரியில் ஒன்று கூடுமாறு அதிபர் தெரிவித்துள்ளார். (ஐ 2)

## சூரிய கிரகணம்

15 ஆண்டுகளின் பின்னர் இந்தியாவின் பீஹார், உத்தரபிரதேசம், மேற்கு வங்காளம் ஆகிய மாநிலங்களில் அக்ரோபர் 24 ஆம் திகதி முழு சூரிய கிரகணம் ஏற்பட உள்ளது.காலை 7 22மணிக்கு இந்த சூரியகிரகணம்தொடங்கும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஓ-4)

## கனடாத தேர்தலில்..,
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பார்த்திபன் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர். 25 வருடங்களாக அவர் கனடாவில் வசித்து வருகிறார். ஸ்காபுரோவின் எல்ஸ்மோர் தொகுதியில் இவர் வேட்பாளராகப் போட்டியிடுகிறார்.

ஒன்ராறியோ மாகாணத்தில் புதிய ஜனநாயகக் கட்சியே ஆட்சியில் உள்ளது. லிபரல் கட்சி எதிர்க்கட்சியாகவும், மத்திய அரசாங்கக் கட்சியாகவும் இருக்கிறது. (ஐ)


## யாழ். இந்துக் கல்லூரி

கீழைத்தேய 'பாண்ட்' வாத்தியக் குழுவினர் அனைவரும் நாளை திங்கட் கிழமை [1995-04-17) நண்பகல் 12 00 மணிக்கு கல்லூரியில் சமுகம் கொடுக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

அதிபர்

(சி/1022]

## நிரு ரியுசன் சென்ரர்

ஸ்ரேசன் றோட்,
கோண்டாவில்

**A/L 97**

யாழ் முன்னணி ஆசிரியர்களின் ஒருங்கிணைந்த சேவை கலை, வர்த்தக வகுப்புக்கள்

ஆரம்பம்: 21-04-95 வெள்ளி 2 மணி

| | | |
|---|---|---|
| பொருளியல் | — | திரு. உதயன் |
| கணக்கியல் | — | திரு ஸ்ரீ |
| வர்த்தகம் | — | பிரபல ஆசிரியர் |
| அளவையியல் | — | திரு S S. மனோகரன் |
| இந்துநாகரிகம் / இந்துசமயம் | — | திரு சோதி |
| புவியியல் | — | திரு. வேலா |
| தமிழ் | — | திரு குழந்தை |
| அரசியல் | — | திரு. சிவனேசன் |
| வரலாறு | — | திரு. பிள்ளை. |
| நாடகமும் அரங்கும் | — | திரு. சத்தியா |

★ அனுமதிகளை முற்கூட்டியே பதிவு செய்யவும்.

(சி/984)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

... லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி 398/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 16 04 1995 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது